கு ணா பிரயம்.

V 5 No: 24. 16.6.1932

m211, N28KN
N325.24
199138

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5] 1932 ஹு ஜூன் மீ 16உ [No. 24

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 461
2. தமிழ்ப்பாடம்
   நளவெண்பா - சுயம்வரகாண்டம் 463
3. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து 2-ம் தசகம்)
   K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 465
4. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (சிறுபறைப் பருவம்) கி. வெங்கடசாமி ரெட்டியார் 467
5. குன்றுடையானும் மக்களும்
   W.V. கோவிந்தசாமி ராஜு B.A., L.T. 469
6. பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா
   T. R. இராஜகோபால் 470
7. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 3. களம் 2.)
   ஷேக்ஸ்பியர் நாடகம் 471
8. கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்)
   T. N. சேஷாசலம் B.A. B.L. 474
9. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்)
   E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 476
10. மதிப்புரை—சுப்ரமண்ய பாரதியார் 479
11. வர்த்தமானம் 479

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ. 16.

இதுகாறுங் கூறியவைகளினின்று, வித்தகமோ விதிவசமோ என்னுமவ் வையவினாவிற்கு ஒருவாறு அமைதி காணக்கூடியவர்களா யிருக்கின்றோ மென்னலாம். எல்லாம் விதியல்ல, முற்றிலும் வித்தகமு மல்ல. விதியின் ஆட்சி ஒருவகைத்து, வித்தகத்தின் ஆட்சி வேறோர் வகைத்து. இவ்விரண்டில், விதியை மதியால் வெல்லலாம், என்றநம்பிக்கை ஒருவகையில் பொய்யாக மற்றோர்வகையில் மெய்யாதலுங் கூடும்.

மனிதர்தம் இன்பதுன்பங்கள் அவரவர் எய்தும் நிலைகளையும் எய்திய நிகழ்ச்சிகளையும் பொறுத்துள என்னுமிது வாழ்க்கையின் நுனிப்புல்லை நக்கிமேய்வார் நவில்கின்ற சொல். வாழ்க்கையின் ஆழத்தில் இருந்து இன்பதுன்பங்களை இயக்குவன அவரவர் கருத்துக்களே. நிகழ்ச்சிகளும் நிலைகளும் விதியினால் இயன்றவைகளாகலாம்; அவைகளை ஏற்றுக்கொள்கின்ற கருத்தினளவே யாகுமாம் அவைகளால் விளைகின்ற இன்பங்களுந்துன்பங்களும். எனின், வினையினை யாள்வது விதியென்றும் கருத்தினையாள்வது வித்தகம் என்றும் ஒருவாறு வகைசெய்துகொள்ளலாம். கொண்டக்கால் மறைபொருள்கள் சில தெளிவடையும்.

செல்வநிலை வறுமைநிலை என்பனவும், நோய்நிலை சுகநிலை என்பனவும், வாழ்க்கைவேறுபாடுகளில் முக்கியமானவை இரண்டு. மானம்உயிர் முதலியவைகளைப் பற்றிய இலாபநஷ்டங்கள் நிகழ்ச்சிகளாகும். மற்றவர் நமக்குச்செய்யும் நன்மையுந் தீமையும் இதனில் அடங்கும். நம்மால் ஆக்குவதற்கும் தடுப்பதற்கும் இயலாமல் ஊழின்வழியே வருவனவும் இருப்பனவும்போவனவும் ஆகிய இந்நிலைகளும் நிகழ்ச்சிகளுமேயல்லாமல், அவைகளுடன் மனிதர் தம் அறியாமையாற் சார்த்தி நினைக்கும் இன்பங்களுந் துன்பங்களு மல்ல. முன்னிங்கு ஓர் இடத்தில் குறித்தபடி, 'வருந்தியழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமின் எனப்போகா' என்பதன் உண்மை, நிகழ்ச்சிகளையும் நிலைமைகளையுமே குறிக்கும். அவைகளைக் குறித்தே அவ்வாசகம் கூறப்பெற்றிருக்கின்றதென்பதும் சொற்களினமைப்பினாலே வெளிப்படையாகின்றது. இன்பதுன்பங்களுக்கு இயைந்த வாக்கியமன்றிது. நிகழ்ச்சிகளும் நிலைமைகளும் நம்முடைய முயற்சியால் முடிக்கப்பெறுதன வாகலாமேயன்றி இன்பதுன்பங்கள் முற்றிலும் வித்தகமதியினர்வசமே இருக்கின்றன என்னுங்கொள்கையே ஊழ்வலியுறுத்தவருமோர் உட்கொண்ட உண்மையெனத் துணிதலே நேர். "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான் முந்துறும்" என்னுமத் திருக்குறள் இத்தன்மையையே தெருட்டி யுரைக்கின்றது. "ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள் போகூழாற் றோன்று மடி" என்ற முதற்செய்யுளினின்றே "ஊழ்" என்னுமவ் வதிகாரத்தின் உட்கருத்தினை ஊகித்துக் கொள்ளலாம். ஆவதும் போவதுமாகிய ஊழ், கைப்பொருளடைதலையும் அதனைக் காத்தலையும் இழத்தலையும், இவைகளுக்கு ஏற்றவாறு நிகழ்கின்ற முயற்சிகளையும் பற்றியே ஆராயப்படுகின்றதென்பது அவ்வதிகாரத்திலுள்ள குறட்பாக்களாலும், பரிமேலழகர் உரையினாலும் நன்கு விளங்குகின்றது. செல்வஞ்செயற்கும் துய்த்தற்கும் உரிய ஊழினை மட்டுமே இங்கு உரைக்

199138

கின்றார். முத்திச்செல்வம் அன்று, வித்தகத்தால் எய்த வல்ல நிலைமையும் 'செல்வம்' என்னுஞ் சொல் குறிக்கும்படி வழக்குளதாதலின், அதனை விலக்குதற்கே, 'கைப்பொருள்' என்ற தொடரை முதற்குறளில் அமைத்தார் என்று எண்ண இடமுளது. வித்தகன்னிலை வாய்த்தலும், அந்நிலையின் நலத்தினால், இன்பதுன்பங்கள் ஊழின் ஆட்சியினின்று அகன்று அவரவர் வயத்ததாயமைவதும் திருவள்ளுவர் அறியாதவைகளல்ல. "இருவேறு உலகத்தியற்கை, திருவேறு, தெள்ளியராதலும் வேறு" என்னுங்குறள், இப்பிரிவினையே எடுத்துப்பேசுகின்றது. "உலகத்தின் இயற்கை வேறு வேறு ஆகிய இரண்டு வகையினில் அமைந்திருக்கின்றது; செல்வத்தில் ஒரு வகையையும், அறிவுடையர் ஆவதில் மற்றொருவகையையுங் காணலாம்," என்பது இக்குறளின் பொருள். இதனில், "திருவேறு" எனத்தொகையாகவும், "தெள்ளியர் ஆதலும் வேறு" என விரித்தும் உரைத்திருப்பதற்கு முக்கியமான நோக்கம் ஒன்று இருத்தல் வேண்டும். நம்முடைய முயற்சிக்கு அடங்காமல் தானே வருவதும் போவதுமாய் ஊழின் விளைவாக உறுவது செல்வம் என்ற நினைவு தோன்றத் 'திருவேறு' எனக் கூறினர். மெய்யறிவு உடையவர் ஆவது விதியின்சார்பு இன்றியேயும், ஒருகால் விதிக்குமாறுகவும், இயலும் என்பதுணர்த்தத் "தெள்ளியர் ஆதல்" எனச்சிறப்பித் திங்குக் கூறியிருப்பதாகக் கொள்ளல் வேண்டும். இதன்படி நோக்குங்கால் "இருவேறு இயற்கைகளையுடையது இவ்வுலகம். ஒன்று ஊழின் வயத்ததாய் வருகின்ற செல்வம்; மற்றது நம்வயத்ததாகிய மெய்யறிவு" என்னும் வேற்றுமை எழுகின்றது. "இருவேறு" என்பதால் திருவும் தெளிவும் தனித்தனிதகைமையன என்பதும் ஒன்றற்கொன்று எவ்வகைத் தொடர்பும் பெற்றதில்லை என்பதும் வற்புறுத்தப்பட்டிருக்கின்றது என்பதில் ஐயமில்லை. எனின், இரு வேறு உலகத்தியற்கை, என்றதற்கு, "உலகத்து ஊழினைபை இயற்கை இரண்டுகூறு" எனப் பரிமேலழகரும் "செல்வமுடையாராதலும் தெள்ளியராதலும் வேறுவேறு ஊழினால் வரும்" என மணக்குடவரும், திருவையும் தெளிவையும் ஊழின் திறத்திலேயே அடக்கிய இவ்வுரைகளின் உண்மை ஐயிர்த்தற்குரியதே. "செல்வமும் மெய்யறிவும், வேறுவேறுபோல் தோன்றுமெனினும் ஊழினாலேயே இவை இரண்டும் விளைவனவாதலின் ஒன்றேயாம்," எனத் திருவள்ளுவர் சாதிக்கநினைத்தாரென்ன இவ்விரு உரைகளும் எழுதப்பெற்றிருக்கின்றன. மற்று திருவள்ளுவர் கருத்து இதற்கு நேர்மாறாக இருக்கின்றதென்னும் உண்மையை இக்குறள் உணர்த்துகின்றதென எண்ணத் துணிகின்றோம். "திருவுடைமை ஒன்று, அது பெருவலி ஊழின் திறம்; மற்று, தெள்ளியராதல் அடியுடன் வேறு, இது முற்றிலும் உன் முயற்சியாலேய ஆகவல்லது. ஆதலின் இதனையும் ஊழென்று பிழைத்து நீ மதிமோசம் போகற்க' என்று திருவள்ளுவர் தெரிந்து கூறுகின்றார் என்றுயாமிங்குக் கொள்கைக்கு ஆதாரங்கள் உளவோ எனச் சிறிது ஆராய்தல் வேண்டும். எதிர்மறை வகையானும் உடன்பாட்டு வகையானும் ஆதாரங்கள் சில திருக்குறளில் அமைந்திருக்கின்றன என நினைக்கின்றோம்.

முதலில், தெள்ளியராதல், என்பதற்கு அறிவுடையராதல் என்றவளவில் பொருள்கண்டு நின்றுவிடலாகாது. அறிவு என்பது சிறிதும் பெரிதுமாய பல்வேறு அறிவுகளைக் குறிக்கும். இது மெய்யுணர்வினின்று வேறுயது. தெள்ளியராதல் என்பதால் திருவள்ளுவர், நூலறிவு தொழிலறிவு முதலிய அறிவுகளைக் கருதிக்கூறாமல், சிறப்பாகிய மெய்யுணர்வையே மனத்திற்கொண்டு பேசுகின்றார் என்பதை மறத்தலாகாது. பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள்நீங்கித் தெளிந்தவர்களே, மெய்யுணர்வெய்திய தெள்ளியர் என்னுஞ் சொல்லிற் குரியவர் என்பது "மெய்யுணர்தல்" என்னும் முன்னைய அதிகாரத்தினால் நன்கு புலப்படும். ஆதலின், "பேதைப்படுக்கும் இழவூழ் அறிவு அகற்றும் ஆகலூழ் உற்றக்கடை" என்றும், "நுண்ணிய நூல் பலகற்பினும் மற்றுந்தன் உண்மை அறிவேமிகும்" என்றும், 'ஊழ்' என்னும் அதிகாரத்தில் வந்துள்ள இவ்விருகுறள்களில் கூறப்பட்டிருக்கின்ற அறிவும் கல்வியும், கைப்பொருள் செய்வதற்குரிய கல்வி அறிவுகளையே தழுவி வழங்கப்பெற்றிருக்கின்றன. அவைகளினின்று மெய்யுணர்வைப் பிரித்துக்காட்டுவதற்கே 'தெள்ளியர்' என்ற சொல்லை வள்ளுவர் அடுத்த செய்யுளில் வழங்கினர். "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாரெனின்" என்று அறத்துப்பாலில் வகுத்துரைத்த மெய்க்கல்வி இங்கு மேவப்பெறவில்லை. "அறிவினா னாகுவதுண்டோ பிறிதினோய் தந்நோய்போற் போற்றாக் கடை" என்று அறத்துப்பாலில் வகுத்துரைத்த மெய்யறிவும் இங்கு மேவப்பெறவில்லை. அறஞ்செயல்வகையினிற்கிணங்கிய அறிவும்கல்வியும் அவை. அறத்துப்பாலின் இறுதியாய் நின்று, பொருள்செயல் வகையைச் சிறப்பாகச் செப்பப்புகுகின்ற பொருட்பாலுடன் தொடர்புகூட்டும் இவ் ஊழ் என்னும் அதிகாரத்தின்கண் குறிக்கப்பெற்றுள்ள இக் கல்வியும் அறிவும், பொருட்பாலிற் கூறியுள்ள கல்வியையும் அறிவையுமே கருத்திற்கொண்டு அன்னவைகளே ஊழின் பெருவலிக்கு ஆளாகுமெனக் கூறப்பட்டிருக்கின்றன. "யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன் சாந்துணையுங் கல்லாதவாறு" என்று எவ்வூரும் எந்நாடும் தனதாக்கிக்கொள்ள வல்லதெனப் பொருட்பாலில் கூறப்படும் உபாயமுடைய கருவியாம் கல்வியே மேலாக ஊழின்வலி மிகும். வாலறிவன் நற்றாள் தொழப்புரியும் அவ்வறத்துப்பால் கல்வி தெள்ளியராயினார்மாட்டு ஊழின் ஆட்சியினின்று வேறுபட்டது. அவ்வாறே, "எதிரதாக் காக்கு மறிவினார்க்கில்லை, அதிர வருவதோர் நோய்" என்று தன்னோய்க்குத் தடைகூறுகின்ற பொருட்பாலிற்குஉரிய அறிவேஊழின் வயத்ததாய்க் கூறப்பட்டிருக்கின்றதே யன்றி, பிறர்நோயைத் தன்னோயாய்க் கொள்ளும் அறத்துப்பாலறிவு இங்கு ஊழின் வலியில் அடங்கவில்லை. "செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் எஃகதனிற் கூரியதில்" எனப் பொருள்செயல்வகைகூறும் பொருட்பாலிற்குரிய அறிவும் கல்வியும் ஊழ்வலியின்முன் நில்லாமையே நல்லதென எம் நெஞ்சம் ஆறுகின்றது. இவ்வாறின்றி அறத்துப்பாலிற் கூறிய கல்வியும் அறிவும் அவைகளாலான பயனும் ஊழிற்கே ஒடுங்குமாயின், அறன்வலியுறுத்தியதெல்லாம் அவலமாய்ப் போகுமன்றோ! இதனால், அறத்துப்பாலிற்கூறியதத்தனையும் திருவள்ளுவர் இவ் ஊழென்னும் அதிகாரத்தால் மறுத்துவிட்டார் என்று நினைக்கின்ற விபரீதம் நேரவேண்டுமே. தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனார் இப்பிழை இழைப்பார் என்று எண்ணுதல் ஒருபோதும் ஏற்காது. ஆதலின் தெள்ளியாதலும் வேறு என்பது ஊழின் ஒருகூறு அன்று என்பதும், ஊழின் தொடர்பின்றி வேறுப ஒன்று என்பதும், திருவள்ளுவர்வாக்கினால்தெரியக்கிடக்கின்றன.

mall, N... N 23.3.54

தமிழ்ப் பாடம் 24.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[445-வது பக்கத் தொடர்ச்சி]

பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கா
ளுணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்—நீணிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து. 140.

கருத்து:—தமயந்தியை அடையவேண்டு மென்னும் ஆசையால் பூலோகத்து வேந்தர் அனைவரும் வந்திருந்தார். வானவரும் நளன்போல் உருவங்கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா னாகிற் கடிமாலை—யன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட வருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. 141.

பொழிப்புரை:—உண்மை நளன் யாவனெனத் தெரியாத தமயந்தி, விதியின் வயத்தினால் தனக்கு நேர்ந்த மன்னவனாகிய நளனைத் தன் மனதிலே தியானம் செய்துகொண்டு, "பிரகாசிக்கின்ற மாலையை யணிந்த வீமராஜன் மெய்யான குலத்தில் பிறந்த வோர் செம்மையான கன்னி யான் ஆனால், அன்னம் சொன்னவனுக்கு நான் மணமாலை சூட்டும் விதம் காட்டியருள்வாய்" என்றாள்.

கண்ணிமைத்த லானடிகள் காசினியிற் றோய்வதால்
வண்ண மலர்மாலை வாடுதலா—லெண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னா
ளறிந்தா ளன்றனை யாங்கு. 142.

கருத்து:—தேவர்கள் கண் இமைக்க மாட்டார்கள். அவர் கால் நிலத்திற்படாது. அவர் அணிந்த மாலையும் வாடாது. இந்த அடையாளங்களால் நளனது வேஷம் பூண்ட தேவர்களை விலக்கி அன்னம்சொன்ன நிடதநாட்டரசனைத் தமயந்தி அறிந்துகொண்டாள்.

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 143.

பதப்பிரிவு:—விண் அரசர் எல்லாரும் வெள்கி மனம் சுளிக்க கண் அகல் ஞாலம் களிகூர மண் அரசர் வன் மாலை தம் மனத்தே சூட வயம்வேந்தை பொன் மாலை சூட்டினாள் பொன்.

பதவுரை.

பொன் - இலக்குமியைப் போன்ற தமயந்தி,
விண் - தேவலோகத்து
அரசர் - அரசர்கள்
எல்லாரும் - எல்லாரும்
வெள்கி - வெட்கப்பட்டு
மனம் - மனத்திற்குள்ளே
சுளிக்க - கோபிக்கவும்,
கண் - இடம்
அகல் - அகன்ற
ஞாலம் - பூமியிலுள்ளவர்கள்
களிகூர - சந்தோஷ மடையவும்,
மண் - பூமியை ஆள்கின்ற
அரசர் - அரசர்கள்
வன் - கொடிய
மாலை - இருளைத்
தம் - தங்களுடைய
மனத்தே - மனதிலே
சூட - அடைந்துகொள்ளவும்,
வய - வெற்றிபொருந்திய
வேந்தை - நளமகாராஜனுக்கு
பொன் - பொன்னாலாகிய
மாலை - சுயம்வர மாலையை
சூட்டினாள் - போட்டாள்.

விரிவுரை:—தமயந்தி நளனுக்கு மாலையிட்ட காரணமாய் உடன்நிகழ்ந்தவற்றை, சுளிக்க களிகூர சூட என்னும் மூன்று வினையெச்சங்களால் கவி குறிக்கின்றார். தாம் செய்த வஞ்சனையையும் கடந்து நளனுக்கு அவள் மாலையிட்டதால் தேவர், வெட்கத்தோடு கோபமும் மிகக் கொண்டனர். ஒருவருக்கொருவர் எல்லாவிதத்திலும் ஏற்றவராய இருவர் மணம்புரியக் கண்ட பூவுலகத்தார் யாவரும் மிக மகிழ்கின்றனர். (ஞாலம் - பூமி. இட ஆகுபெயராய் அதனில் வாழ்கின்ற மக்களை இங்குக் குறிக்கின்றது). சுயம்வரத்திற்கு வந்திருந்த மற்ற அரசரோ, ஒவ்வொருவரும் தனக்கன்றி வேறு யாருக்குத் தமயந்தி மாலையிடுவாள், என்று ஏமாந்து இருந்தனர். அப்படியிருக்க அவள் நளனுக்குப்போய் மாலையிடக் கண்டும் அவர்களால் நம்ப இயலவில்லை. "இப்படியும் நேருமா. நானிருக்க நளனையும் வரிப்பளோ ஒருத்தி! என ஒவ்வொருவனும் திகைத்தான். காண்பது கனவோ நினைவோ வென அவர்மருண்டனர். அவர்களுடைய மனங்கள் ஒளியிழந்து இருண்டுபோயின. மாலை, என்பது இங்குச் சாயங்காலம். மாலையில் உலகம் எப்படி இருளுமோ அப்படியே அவர்மனம் இருளடைந்தது.

அணிகளில் சிலேடை என்பது ஒன்று. ஒரே சொல்லாவது, சில சொற்கள் சேர்ந்தாவது வேறுவேறு பொருளில் வரும்படி அமைப்பது இந்த அணியின் இலக்ஷணம். புத்தியில்லாதவன், என்பதற்கு அறிவு கெட்டவன் என்றும், புத்தியில் + ஆதவன் = புத்தியிலே சூரியனுக்கு நிகரானவன் என்றும் சிறுபிள்ளைகள் சொல்லிவிளையாடுவதும் இச் சிலேடையணியாம். இது, தொடர்ந்த வார்த்தைகளை வேறு வேறவிதமாகப் பிரிப்பதால் சிலேடை தோன்றுவதற்கு உதாரணம். அப்படிக்கின்றி ஒரே மொழியை இரண்டு அர்த்தத்தில் உபயோகப்படுத்தினாலும் சிலேடைதான். "ஏழைகளும் தவசிகளும் ஒரு தன்மையர். ஏனெனில் இருவரிடத்திலும் காசு இல்லை." காசு என்பதற்குப் பணம் என்றும் குற்றம் என்றும் இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. ஏழைகளிடத்தில் காசு = பணம் இல்லை. தவசிகளிடத்தில், காசு = குற்றம், இல்லை. ஆகையால் சிலேடையாக இருவரும் ஒரு தன்மையராகின்றனர். இனி ஒரு பதத்தை இரண்டுதரம் வேறு வேறு அர்த்தத்தில் உபயோகப்படுத்துவதும் சிலேடையணி.

தாடகையை வருணிக்கின்ற கம்பர், அவளுடைய பெரிய உருவத்தைக் காட்டும்பொருட்டுச், "சிலம்புகள் சிலம்பு இடை செறித்த கழல்" உடையவள் என்று கூறுவார். சிலம்பு என்பதற்கு மலை என்றும், காலில் அணிந்து கொள்ளும் நூபுரம் என்றும் இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. பாதசரம் 'கலீர் கலீர்' என்று சப்தம் செய்வதற்காக அதனுள் சிறுசிறு கற்களைப் போட்டுவைப்பதுண்டு. இவள் அணிந்திருந்த சிலம்புகளுக்குள்ளே அந்தச்சிறு கற்களாக இவள் மலைகளையே பிடுங்கிப் போட்டிருந்தாளென்றால், அந்தச் சிலம்பு எத்தனை பெரியதாய் இருக்கவேண்டுமோ. அதை அணிந்த கால்கள் எத்தனை பெரியவோ! சிலம்புகள் - மலைகளை, சிலம்பு இடை - நூபுரத்திற்குள்ளே, செறித்த - போட்டிருக்கின்ற, கழல் - கால். இது ஒரு சொல்லை இரண்டுஅர்த்தத்தில் உபயோகப்படுத்தியது. சாபம், என்பதற்குப் பெரியோர் இட்ட சாபம் என்றும், வில் என்றும் இரண்டு அர்த்தங்கள் உள. வாங்குதல் என்பதற்கு, முள்வாங்குதல் என்பதுபோல நீக்குதல் என்ற பொருளும், வளைத்தல் என்னும் பொருளும் கொள்ளலாம். வில்லிபுத்தூரர் இப்பதங்களைக்கொண்டு அழகான சிலேடை ஒன்று அமைத்து, இராமபிரான் விச்வாமித்திரனுடன் மிதிலாநகருக்குச் சென்று திரும்புகின்ற காலத்தில் அந்த இராமன், "வாங்கியன, பூங்கமலக் கையாலும் ஒருசாபம், காலாலும் ஒருசாபம்" என்று பாடியுள்ளார். இதனில் ஒரே சொல்லை இரண்டு பொருள்படும்படி ஒரே தரம் வைப்பதும், ஒருசொல்லை இரண்டுதரம் இருவேறு பொருள்களில் உபயோகப்படுத்துவதும் ஆகிய இருவித சிலேடைகளையும் காணலாம். இராமன் கையால் ஒருசாபம் வாங்கினான் - கையால் சிவதனுசை வளைத்தான் - காலால் ஒருசாபம் வாங்கினான் - காலினால் அகலிகையின் சாபத்தை நீக்கினான். வாங்கியன, என்ற ஒரேசொல் வேறு வேறு அர்த்தத்தில் காலோடும் கையோடும் சேரவேண்டியிருக்கிறது. சாபம், சாபம் என்பன இரண்டு தரம் வந்து இரண்டு அர்த்தத்தில் நிற்கின்றன.

இந்தச் செய்யுளில், மாலை என்ற பதம் இப்படிச் சிலேடையாக வந்திருக்கின்றது. தமயந்தி நளனது கழுத்திற்குப் புறத்தே ஒரு மாலை சூட்டினாள். மற்றவரசர் கழுத்திற்குள்ளே (மனதிலே) ஒருமாலை சூடிக்கொண்டனர். முன் மாலை மணமாலை. பின் மாலை மாலைக்காலம், இருள்.

மால், என்பதற்கு மயக்கம் என்ற பொருள் உளது. அதற்கு இரண்டாம்வேற்றுமை மாலைஆகும். அப்பொழுது தம்மனதிலே மயக்கத்தைக் கொண்டனர், என்று கூறலாம். ஆனாலோ, அது இரண்டாம் வேற்றுமை விரியாயிருக்குமாயின் பின்வரும் தகரம் மிகவேண்டும். மாலைத் தம்மனத்தே என் றில்லையாகையால், மாலை என்பதற்குச் சாயங்காலம் என்று இரண்டன்தொகையாகப் பொருள் கூறினேன்.

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே-யொண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. 144.

பதப்பிரிவு:—திண் தோள் வயம் வேந்தர் செம் தாமரை முகம் போய் வெண் தாமரை ஆய் வெளுத்தவே ஒள் தாரை கோமாலை வேலான் குலம்மாலை வேல் கண்ணாள் பூ மாலை பெற்று இருந்த போது.

அன்வயம்:—ஒள்தாரைக் கோமாலை வேலான், குலமாலை வேல்கண்ணாள் பூமாலை பெற்று இருந்த போது, திண்தோள் வயவேந்தர் செந்தாமரை முகம் போய் வெண்தாமரையாய் வெளுத்தவே.

பதவுரை.

ஒள் - ஒளியுடையதும்
தாரை - கூர்மைவாய்ந்ததும்,
கோ - சிறந்த
மாலை - மாலை சூடியிருக்கின்றதுமான
வேலான் - வேலாயுதத்தையுடைய நளன்.
குலம் - பிறந்தகுலம் புகுந்தகுலம் ஆகிய உபய குலங்களுக்கும் [கின்றவளும்
மாலை - மாலைபோன்ற அலங்காரத்தைச் செய்
வேல் - வேலைப்போன்ற [தமயந்தியின்
கண்ணாள் - கண்களை யுடையவளுமாகிய
பூமாலை - புஷ்பமாலையை
பெற்று - பெற்று
இருந்தபோது - இருந்தபொழுது,
திண் - வலியமைந்த
தோள் - தோள்களையுடைய
வயம் - வெற்றிவாய்ந்த
வேந்தர் - மற்ற அரசர்களுடைய
செம் - சிவந்த
தாமரை - தாமரைபோன்ற
முகம் - முகங்கள்
போய் - மாறி
வெண் - வெண்மையான
தாமரை ஆய் - தாமரைகளாக
வெளுத்தவே - வெட்கத்தினால் வெளுத்துப் போயின.

விரிவுரை:—தமயந்தியின் மாலையைப் பெறாத அரசர்களுடைய செந்தாமரைபோன்ற முகங்கள் வெட்கத்தால் வெளுத்து வெண்டாமரைபோல் ஆயின. இந்தச் செய்யுளில் மாலை என்னும்சொல் பலஇடத்தில் வந்திருப்பது சிலேடை அணி அன்று. ஒரேசொல் ஒரேஅர்த்தத்தில் ஒரு செய்யுளில் பல விடங்களில் வருமாயின் அதனைச் சொற்பொருட் பின்வரு நிலையணி என்பர். அதன் இலக்கணம் பிறகு கற்கலாம்.

மல்லன் மறுகின் மடநா குடனாகச்
செல்லு மழவிடைபோற் செம்மாந்து—மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டா
னன்மாலை வேலா னளன். 145.

பதப்பிரிவு:—மல்லல் மறுகில் மட நாகு உடன் ஆக செல்லும் மழ விடைபோல் செம்மாந்து மெல் இயலாள் பொன் மாலை பெற்ற தோளோடும் புறப்பட்டான் நல் மாலை வேலான் நளன்.

அன்வயம்:—நல்மாலை வேலான் நளன், மெல்இயலாள் பொன்மாலை பெற்ற தோளோடும், மல்லல் மறுகில் மடநாகு உடன்ஆகச் செல்லும் மழவிடைபோல் செம்மாந்து, புறப்பட்டான்.

பதவுரை.

நல் - அழகிய
மாலை - வெற்றிமாலையால் அலங்கரித்திருக்கின்ற
வேலான் - வேலை உடையவனாகிய

நளன் - நளவேந்தன்,
மெல் - மிருதுவாகிய
இயலாள் - தன்மையுடைய தமயந்தி (இட்ட)
பொன் - அழகிய
மாலை - சுயம்வர மாலையை
பெற்ற - அடைந்த
தோளோடும் - தோளோடு,
மல்லல் - வளப்பம் பொருந்திய
மறுகில் - வீதியில்
மட - இளமைபொருந்திய
நாகு - பசு
உடன் ஆக - கூட வர
செல்லும் - போகின்ற
மழ - இளமையாய
விடைபோல் - இரஷபத்தைப்போல்
செம்மாந்து - களிசிறந்து
புறப்பட்டான் - (தமயந்தியோடு) புறப்பட்டான்.

இதற்கிடையில், சுயம்வரத்திற்கு வந்திருந்த வானவர்கள் செய்தியைக் கவி கூறுகின்றார்.

வேலை பெறுவமுதம் வீமன் றிருமடந்தை
மாலை பெறாதகலும் வானாடர்—வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியி லாக்கு
மிருங்கலியைக் கண்டா ரெதிர். 146.

பொழிப்புரை:—பாற்கடலில் பிறவாத அமிர்தம் போல்வாளாகிய வீமராஜனது அழகிய மகளது மணமாலையை [illegible]டையாமல் அகல்கின்ற தேவர்கள், கரைமீது மோது ஒலிக்கின்ற கடலால்சூழப்பட்ட உலகத்தினுள்ளவர்களுக்குத் தாழ்மையுண்டாக்கித் துன்பம்செய்கின்ற கலிபுருடனை எதிரே வரக்கண்டனர்.

ஈங்குவர வென்னென் றிமையவர்தங் கோன்வினவத்
தீங்கு தருகலியுஞ் செப்பினா—னீங்கள்
விருப்பான வீமன் றிருமடந்தை யோடு
மிருப்பான் வருகின்றேன் யான். 147.

பொழிப்புரை:—வந்த கலிபுருடனைத் தேவேந்திரன், "இங்கு நீ எதற்காக வருகின்றாய்" என்று வினவ, தீமையைச் செய்கின்ற அந்தக் கலியும், 'நீங்கள் விரும்பிய வீமன் புத்திரியோடு இருக்க நான் வருகின்றேன்' என்றான்.

மன்னவரில் வைவே னளனை மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டா—னுன்னுடைய
வுள்ளக் கருத்தை யொழித்தே குதியென்றான்
வெள்ளைத் தனியானை வேந்து. 148.

பொழிப்புரை:—"வந்த அரசர்களிலெல்லாம் கூரிய வேலையுடைய நளனை, சந்திரன்போன்ற முகத்தையுடைய தமயந்தியின் மணமாலையைப் பெற்றான். ஆகையால் உன் மன எண்ணத்தைவிட்டு வந்தவழியே போ" என்று ஐராவதத்தையுடைய இந்திரன்சொன்னான்.

விண்ணரசர் நிற்க வெறுத்தேன் மணமாலை
மண்ணரசற் கீந்த மடமாதை—னெண்ணங்
கெடுக்கின்றேன் மற்றவடன் கேள்வனுக்குங் கீழ்மை
கொடுக்கின்றே னென்றான் கொதித்து. 149.

பொழிப்புரை:—அதுகேட்ட கலி, கோபங்கொண்டு "தேவர்களிருக்க மதியாமல் வாசனையுடைய தேனொழுகும் மணமாலையை மண்ணாளும் அரசனுக்கு இட்ட அவ்வறிவில்லாப் பெண்ணின் எண்ணத்தைச் சிதைத்து அவள் நாயகனுக்கும் கீழ்மைசெய்கின்றேன்" என்றான்.

வாய்மையுஞ் செங்கோல் வளனு மனத்தின்கட்
டூய்மையு மற்றவன் றோள்வலியும்—பூமா
னெடுங்கற்பு மற்றவற்கு நின்றுரைத்துப் போனா
னடுங்கொற்ற வச்சிரத்தா னங்கு. 150.

கருத்து:—அதன்மேல், இந்திரன், நளனது மேன்மையையும் தமயந்தியின் கற்பையும் பற்றிக் கலிபுருடனுக்குச் சொல்லிப் போயினான்.

செருக்கதிர்வேற் கண்ணியுடன் றேர்வேந்தன் கூட
விருக்கத் தரியே னிவரைப்—பிரிக்க
வுடனாக வென்றா னுடனே பிறந்த
விடநாக மன்னான் வெகுண்டு. 151.

கருத்து:—நளனையும் தமயந்தியையும் பிரித்துவைப்பதாகச் சொல்லிக் கலிபுருடனும் போயினான்.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[451-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து 2-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

முந்நீர் ஞாலம் படைத்தவென் முகில்வண்ணனே
யந்நா ணீதந்த வாக்கையின் வழியுழல்வேன்
வெந்நா ணோய்வீய வினைகளை வேரறப்பாய்ந்
தெந்நாள் யானுன்னை யினிவந்து கூடுவனே.

குறிப்புக்கள்:—முந்நீர் ஞாலம் - சமுத்திரம் சூழ்ந்த பூமி, முந்நீர்-மழைநீர், ஊற்றுநீர், ஆற்றுநீர். வண்ணம்-சுபாவம். முகில் வண்ணன் - மழையைப்போல் பிறர் ஹிதத்தையே தேடும் பகவான், அந்நாள் - ஆத்மாக்களும் அசித்துவஸ்துக்களும் பொன் உரைத்ததைத் தழுவிய மெழுக்கைப்போல் யுகப்பிரளயத்தில் கலந்து கிடந்து பிறகு பிரம்மசிருஷ்டியில் ஆத்மாவைத் தேஹத்தோடு சேர்ந்துவாழ ஏற்படுத்திய நாள். வேர் அறப்பாய்ந்து-கர்மங்கள் அவைகளின் வாசனையோடு நசிக்க, எந்நாள்-எப்போழ்து. எத்தனையோ ஜந்மங்கள் எடுத்தும் அந்த நல்லநாள் ஏற்படாததால் இனி அது வரப்போகிறதே இல்லை என்று ஆழ்வார் நசையறுகின்றார் என்று ஒருவாறு தோற்றுகின்றது. இவ்வண்ணமே பழைய உரைகாரர்களும் அபிப்பாயப்பட்டிருப்பதாக ஸ்ரீ ராமாநுஜருக்குவரலாற்றுமுறையில் பாடம் ஓத, ஆழ்வாருக்குத் தன் ஸங்கல்பம் பயனற்றதாய் முடியுமென்றும் பகவான் தனக்கு அநுகூலம் செய்யமாட்டாரென்றும் தோற்றியிருந்தால், தாம் முதல் பாசுரத்தில் எடுத்துப் பேசிய விண்ணப்பத்தைப்பின் 2

முதல் 9-ம் பாசுரம் வரையில் பிரஸ்தாபத்துக்குக் கொண்டுபோ யிருக்கமாட்டாரென்று அபிப்பிராயப்பட்டு இவ்வுரை 9-ம் பாசுரத்துக்கு மாத்திரம் ஏற்குமென்று அறுதியிட்டார். 9-ம் பாசுரத்தில், ஆழ்வார் திருவுள்ளம் ஆசைவிட்டொழிய, பகவான் ஆழ்வார் நோவுபடவொண்ணுதென்று உடனே திருமலையில் தான் இருக்கும் தன்மையைக் காட்டியதால் ஆழ்வாருக்கு மனம் நிலைநின்றதென்று 10-ம் பாசுரம் கூறுகின்றது.

குறிப்புக்கள்:—வெந்நாளை வீய - வெம் - கடுமையான நாள் நோய் - (விரக) பிறிந்திருக்கிற காலமாகிற மனோவியாதி, வீய - நசிக்க.

அவதாரிகை :—திருமலையில் அழகர்பெருமானைக் கண்டு அவனுடைய அதியாச்சரிய சௌந்தரியத்தைச் சென்ற தசகத்தில் அநுபவித்துநிற்க, திடும்பிரவேசமாய் இத்தசகத்தில் "உன்னை எங்குவந்து எந்நாள் கூடுவன்" என்று மனதில் நோவுபடுவானேன் என்றால் ஆழ்வார் தாம் செய்யக் கோரியுள்ள ஸகல கைங்கரியங்களும் பிரகிருதி சம்பந்தத்தால் தடைப்பட அடுத்த தசகத்தில் பாடுவதுபோல், ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி அடிமைசெய்யவேண்டுமென்ற எண்ணம் நிறைவேறக் கூடவில்லை. இக்குறை போதாது போல் ஆழ்வாருக்கு அழகரைக் காண்கைக்குமுன் பகவானிடத்திலிருந்த யோகசாக்ஷாத்காரமும் அழகர் தரிசனநிமித்தம் கலைந்துபோகவே பகவானிடத்தில் இருந்து பிரிந்தது "வெந்நாளைப்" ஆயிற்று; ஆதலால் நோவுபடுகிறார்.

பொழிப்புரை:—"ஸம்ஸாரி ஆத்மாக்க ளெல்லார் பக்கலிலும் சென்று வெள்ளம் கொள்ளும்படி கரைபுரண்டு புரளுகிற உன்னுடைய நிரவதிக காருண்ணிய வெள்ளத்தாலே உன் திருவடியைச் சேருகைக்கு உபாயமாகக் கரணகளேபரங்கள் முதலான உபகரணங்களை ஸர்வாத்மாக்களுக்கும் கொடுத்தருளுகிறவனே, அன்று நீ எனக்குத் தந்த உன் திருவடிகளைச் சேரமாட்டாதே திரும்பியும் ஸம்ஸார சமுத்திரத்தில் போய் விழுந்தேன். இப்படி உன்னைப் பிரிந்திருக்கிற காலமாகின்ற காலாக்நியைப் போல நோய் விடும்படி உன்னைப் பிரிந்திருக்கைக்கு ஹேதுவான என்னுடைய வினைகளை வேரறப் பாய்ந்து, என்று நான் உன்னை வந்து கூடுவது என்கிறார்"—ஆறாயிரப்படி.

2-ம் பாசுரம்.

வன்மா வைய மளந்தவெம் வாமனநின்
பன்மா மாயப்பல் பிறவியில் படிகின்றயான்
தொன்மா வல்வினைத் தொடர்களை முதலரிந்து
நின்மா தாள்சேர்ந்து நிற்பதெஞ் ஞான்றுகொலோ

உரை:—கல்களும் செடிகளு மடர்ந்த உலகத்தை அளந்தஎன்வாமனனே! உன்னுடையஸத்வாதிகுண பேதத்தாலே பலவகையாய்த்துயர்ந்துஉதிக்கும் பெரிய மாயையாகிய பிரகிருதியில் வெகுவித ஜன்மங்களிலே படிகின்ற யான் மஹாக் குரூரமான பாபங்களாகிற தொடரை வேரோடேயே அறுத்து உன்னுடைய மஹத்தான திருப்பாதங்களைச் சேர்ந்து அகலாதே இருப்பது என்றைக்கோ.

குறிப்புக்கள் :—முன்பாசுரத்தில் நான் நற்குண நற்செய்கைகளைப் பாராட்டி அவைகளின் வழியாய் உன்னைக்கிட்டியணுக நீ கொடுத்த கரணகளேபரங்களை உபயோகிக்காமல் உன்னைவிட்டு நான் அகன்றுவிட்டேன், என்று குறைகொண்டார். இப்பாசுரத்தில், "என் வாமனனே" என்ற அழைப்பதால் தன் முக்கிய உபயோகத்திற்காகவே பகவான் அந்த அவதாரம் செய்ததாகக் கூறுகிறார். ஏனெனில் அவன் பூமிஸ்பத் தானம் வாங்கினபிறகு திருவிக்ரமனாகச் சகல உலகங்களையும் அளந்தபோது உலகத்தாருக்கெல்லாம், காண்மின் இதுவே உய்யுமாறு என்று, தன் திருவடிகளைக் காட்டியருளினார். ஜாக்கிரதையா யிருந்தவர்கள் அத்திருவடியை அப்பொழுதாவது ஆச்ரயித்துஉஜ்ஜீவித்திருக்கலாமென்றும் தாம் அப்படிச் செய்யாது தவறிப்போனதாகவும் திருவுள்ளம்பற்றிக் கூறியபடி.

குறிப்பு:—பிரகிருதி சம்பந்தத்திலிருந்து ஆத்மாவை விடுவித்துக் கொள்வது கடினமென்று இப்பாசுரம் கூறுவது "மம மாயா துரத்தியயா" என்ற ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் அருளிச்செய்ததை உட்கொண்டு சொல்கிறபடி.

3-ம் பாசுரம்.

கொல்லா மாக்கோல் கொலைசெய்து பாரதப்போ
ரெல்லாச் சேனையு மிருநிலத் தவித்தவெந்தாய்
பொல்லா வாக்கையின் புணர்வினை யறுக்கலறு
சொல்லா யானுன்னைச் சார்வதோர் சூழ்ச்சியே

பதக்குறிப்புக்கள்:—கொல்லா மாக் கோல்—கொல்லா—ஓர் சிறு பிராணியினுடைய உருவத்தைக்கூடக் கொல்லுகிறதற்குப் போதாதாகி, மா - குதிரையை, கோல் - ஓட்டும் கோல் - சாட்டை; ஸ்ரீ கிருஷ்ணபகவான் பாரதப்போரில் பஞ்சபாண்டவர் சைன்னியத்தைச் சேர்ந்தபோது தேரில் குதிரைகளைக் கடாவும் கோல்தவிர வேறே ஆயுதம் கையில் கொள்ளவில்லை என்பது இங்கு ஞாபகப்படுத்திக்கொள்ளத் தக்கது. ஆழ்வார், இந்தச் சிறிய கோலே எல்லாச் சேனைகளையும் தரைப்படுத்தப் போதுமாயிருந்தது என்று ஆச்சரியப்படுகிறார். மேற்கூறியபடி திருவிக்கிரமாவதாரம் தமக்கு உதவியாகாமற்போகிறதே, ஸர்வசுலபமாய்க் கோபாலர்களும் ஸஹாக்களாய் நினைத்து உடன் ஆடிய ஸ்ரீ கிருஷ்ணாவதாரமும் தனக்குப் பயன்பட வில்லையே, எனவெறுத்து இப்பாசுரத்தில் நோவுபடுகிறார். இப்படி யநர்த்தமாய் உன்னாலல்லது அறுக்க முடியாதிருக்கிற விந்தப் பிரகிருதி சம்பந்தத்தை நீயேயறுத்து நான் உன்னைச் சேர்வதற்கு ஒரு (சூழ்ச்சி) உபாயம் பார்த்தருளாய்—என்கிறார்.

4-ம் பாசுரம்.

சூழ்ச்சி ஞானச் சுடரொளி யாகியென்று
மேழ்ச்சிக் கேடின்றி யெங்கணு நிறைந்தவெந்தாய்
தாழ்ச்சி மற்றெங்குந் தவிர்ந்துநின் றாளிணைக்கீழ்
வாழ்ச்சி யான்சேரும் வகையரு ளாய்வந்தே

குறிப்பு:—வந்தே—வந்து + ஏ - அதாவது, ஸ்ரீராமன் ஸ்ரீகிருஷ்ணன் ஆகிய இவ்வவதாரங்கள் போன்று வேறு அவதாரம் எனக்காகவேயெடுத்துத்தோன்றி, என்றும் ஏழ்ச்சி கேடு இன்றி - என்றும் கூடுதல் குறைவு இல்லாமல் ஒரே சுபாவமாய், சூழ்ச்சி - உலக ரக்ஷணத்தில் முயற்சியாகிய, ஞானச் சுடரொளி - ஞானம் சக்தி பலம் ஐசுவரியம் இவைகளின் ஜோதியோடு, எங்கணும் நிறைந்த - எப்போதும் எல்லா விடத்தும் இருந்து எல்லாரையும் காத்து அளிக்கும், எந்தாய், மற்றெங்கும் தாழ்ச்சி தவிர்ந்து - இதர விஷயங்களில் ஆசையற்று இவைகளை ஒழித்து, நின் தாள் இணைக்கீழ்- உன் திருப்பாதங்களிலேயே, வாழ்ச்சி-சிறப்பை யான் சேரும்பிரகாரத்தை, அருளாய்—அவதாரஞ் செய்து அருளவேண்டும்.

5-ம் பாசுரம்.

வந்தாய் போலே வந்தென் மனத்தினை
சிந்தாமற் செய்யா யிதுவே யிதுவாகில்
கொந்தார் காயாவின் கொழுமலர்த் திருநிறத்த
வெந்தாய் யானுன்னை எங்குவந் தணுகிற்பனே

எனக்காக அவதாரமெடுத்து ரக்ஷிக்க உனக்கு மனமில்லையாயின் முன்பு கஜேந்திர ஆழ்வானுக்கு இடர் தீர்க்க வந்ததுபோல் நீயே வந்து உதவிபுரிய வேணும். இப்படி வந்து என்மனத்தினைச் சிந்தாமல் நிலைபெற நீ செய்யாதொழிந்தால் நான் என்னுடைய யத்நத்தால் உன்னை வந்து சேருகிறதென்று ஒரு பொருளில்லை. இனி உன்னழகைக் காணப்பெறாதே இழந்துபோம். இத்தனை யாகாதே நான் என்கிறார்"—ஆறாயிரப்படி.

குறிப்பு:—இதுவே இதுவாயின் - எனக்கு உதவிபுரிய ஒரு அவதாரம் எடுப்பதோ அல்லது நீயே கருடஆழ்வானின்மீது ஏறிச் சுவயமே வருவதோ செய்யாமல், இதுவரையில் வாளா விருந்ததுபோல் ஒன்றும் செய்யாவிடில்.

6-ம் பாசுரம்.

கிற்பன் கில்லே னென்றிலன் முனநாளா
லற்ப சாரங்க ளவைசுவைத் தகன்றொழிந்தேன்
பற்பல் லாயிர முயிர்செய்த பரமாநின்
நற்பொற் சோதித்தா ணணுகுவ தெஞ்ஞான்றே

குறிப்பு:—முன்சென்ற பாசுரத்தின் கருத்து, நீ என் இஷ்டபூர்த்தி செய்யாவிடில் உன் திருவழகைக் காணாது இழப்பேன்என்பது ஆறாயிரப்படி உரை. "ஏன் இழக்கவேணும். நீர் உம் முயற்சியால் "ஜோதி உருவத்தை, அணுகக் கூடாதோ" என்னும் அந்தக்கேள்விக்கு இப்பாசுரத்தில் விடைகூறுகிறார்.

"இதற்குமுன் னுள்ள காலமெல்லாம் உன் திருவடிகளைச் சேருகைக்கு ஈடா யிருப்பதொரு நற்செய்கையைச் செய்வோமென்று செய்தல், அதற்கு விரோதியான தீச்செயல்களைத் தவிருமோ வென்று தவறுதல் செய்திலேன். எடுத்தபடி செய்து திரிந்தேன். இப்படிச் செய்து திரிந்தவர் அல்பங்களான விஷயஸுகத்தை அநுபவித்து உன் திருவடியைச் சேருகைக்குயோக்யதையன்றிக்கே அகன்று போனேனென்று நசையற்றுப்போய்த் துவளபுக்கவாறே, பின்னையு மவனுடைய ஸர்வாத்துமாக்களையும் நிர்மாண அவசியகமான ஆச்சரியமான சக்தியோகத்தை அநுஸந்தித்துப் போய் அதனால் உஜ்ஜீவித்து இந்த அறிவற்ற ஆத்மாக்களைச் சிருஷ்டித்த நீ, என்னை ஒருவனையும் உன் திருவடிகளுக்கு ஈடாகும்படி பண்ணியவகை உனக்கு ஒருபொருளோ? ஆனபின்பு உன் திருவடிகளை என்று நான் சேர்வது, என்கிறார்"—ஆறாயிரப்படி

ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

[447-வது பக்கத் தொடர்ச்சி]

9. சிறுபறைப் பருவம்

எறிதிரைப் புனன்ம தகுபய முழக்கங்
கடைஞரீண்டி யுழுதொழின் முழக்கம்
இணைமுலைக் கடைமாதர் குரவையின்
முழக்கம்வித் திடுநர்வாழ்த் திடுமுழக்கம்
பொறிதிளைத் தடர்கருப் பாலையின்
முழக்கமென் புண்டரீகத் தடாகப்
புனலாடு மிடமாத ரிளமைந்தர்
சிவிறியாற் புனலூற்று பெருமுழக்கம்
நெறிமுலைக் கண்குரற் காரெருமை
கன்றுள்ளி நெறிபடர்ந் திடுமுழக்கம்
நீலநிற வண்டினங் கள்ளுண்டு
மதுரயாழ் நிகர்மதுர இசைமுழக்கம்
செறிதரப் பெறுதிரு மூனைப்பாடி
நாடாளி சிறுபறை முழக்கியருளே
தேவகிக் குறுபுதல்வ மூவருக்
கொருமுதல்வ சிறுபறை முழக்கியருளே.

கடமுற் றிருந்தொழுகு புகர்முகக்
களியானை கைத்தலைக் கொடுமுழக்கம்
கவனவாம் புரவிதம் மேற்கொளும்
வயவரைக் கைத்துமருள் கொடுமுழக்கம்
விடமுற்று வெம்பணிக் கொடியோன்
பொருட்டுயிர் விடுப்பவரு வேந்தர்நெஞ்ச
மிகுபறை யறிந்துதலை பொதிரெறிந்
திருகரம் வெதிர்த்துளம் வெரீஇமுழங்க
மடமுற்று யோகினி யிடாகினி
முதற்கூளி மல்குவகை யின்முழங்க
மாருதி தனஞ்செயன் தேர்மிசை
யிருந்துசெரு மகிழ்கணத் தொடுமுழங்கத்
திடமுற்று வெண்ணிற வலம்புரி
முழக்குமால் சிறுபறை முழக்கியருளே
தேவகிக் குறுபுதல்வ மூவருக்
கொருமுதல்வ சிறுபறை முழக்கியருளே.

மருமலர்ப் பங்கய முகஞ்சுவைத்
திதழூறு மதுவுண்டு தாதளைந்து
வருசுரும் பினையாம்பல் கண்டுட்
பொறுமையான் மலரிதழ்க் கதவடைப்பப்
பெருமலர்க் கேதகை வசீகரஞ்
செயுமாதர் பெட்பெனப் பரிமளத்தாற்
பிரசமுண் டெனவுட் புகுத்திமென்
பொடியினிற் பேதுறு மருள்கொடுப்பப்
பொருமலற் றெமதுமண வாளன்வந்
தனனெனப் புன்னைநுண் டாதிறைப்பப்
பொன்சொரி இதழிதள விளநகை
விளைப்பமகிழ் புதுமணம் விருந்துசெய்யத்
திருமலி செழுஞ்சோலை வெண்ணெய்நக
ராதியன் சிறுபறை முழக்கியருளே

தேவகிக் குறுபுதல்வ மூவருக்
கொருமுதல்வ சிறுபறை முழக்கியருளே.

தூரத்துங் கொடுஞ்சின இடங்கருக்
கஞ்சிமேற் றுள்ளும்ப கட்டுவாளை
துளிமழைக் குலவகடு கீண்டிரவி
பச்சைவெங் தூரகத முகம்புடைத்துப்
பரத்துங் கதிர்த்திங்கள் முத்துங்
குழம்பிவிண் பாய்நதியின் மீனொடாடிப்
பாரிசா தத்தினிழன் மேயும்நிரை
வெருவப்பசும் பொன்மலர் சிந்திமீண்டு
வரத்துன்னு வான்மீன வழிகொளத்
தேங்கனி வயின்வயி னிளைப்பாற்றவெண்
மடற்கமு கடைப்பைதர மாந்தரு
விருந்துசெய வளர்செந்நெல் கவரிவீசத்
திரத்துள்ள முற்பொய்கை புகும்வெண்ணெய்
நகராளி சிறுபறை முழக்கியருளே
தேவகிக் குறுபுதல்வ மூவருக்
கொருமுதல்வ சிறுபறை முழக்கியருளே.

வெம்பொறி பிறங்குகட் கனகன்
புடைத்திடு மிடற்கருந் தூணனைக்கு
விழிவட்ட மாயிடா முகமதி
வெளுப்புறு மிகுபசி நரம்புதோன்று
கொம்பொடு நுடங்குமிடை கண்ணுறு
அல்குற் கொடிஞ்சியந் தேர்க்கணமுறு
கொங்கைவரை சிம்பால் பொசிந்திணைக்
கண்கரு குழையுமணி வயிறுவிம்மா
வம்பொடு சிறந்தவெதிர் புரைதோள்கள்
மெலிவுறு வரைகண் மூன்றுந்தெரிவுறு
வயாவுநோய் கொண்டிடா மதிபத்தும்
நிறைவுற வந்தூதித் தண்டமுகடுஞ்
செம்பொன் வரையும் பகமுழங்கு
நரசிங்கமே சிறுபறை முழக்கியருளே
தேவகிக் குறுபுதல்வ மூவருக்
கொருமுதல்வ சிறுபறை முழக்கியருளே.

வேறு

நாகணை மீதிலி யோகுசெய் வாயுனை
நத்தினர் பெறுகதிரே
நான்முக னுர்மறை யோதிம
நலத்தொடு மருளினையால்
மாகன காசுர னோரறை தூணின்
மலைக்குமு னவனெதிரே
வாளரி யாயவன் மாமகன் வாய்மை
மகிழ்ச்சியி னிறுவினையே
ஆகலி னுலனை யேசா னுக
அடித்துணை தொழுபெரியோர்
ஆடுக பாடுக வாவென ஓதினு
மப்படி புரிகுவையால்
மோகன ரூப வனுதர் சகாய
முழக்குக சிறுபறையே
மோதுறு சீர்நவ நீதபு ரேசன்
முழக்குக சிறுபறையே. 6.

சீதர காரண வாமன கோவல
சிட்டர்க ளுறுதுணையே
தேவர்க ளுபக பூமிம னுளத்ரி
விக்ரம நாகரியே
மாதவ யால்வசு தேவ குமார
மலர்க்கண மணிவணனே
வாம புராதன ஆயிர வாயர
வத்தறி துயில்பவசா

கேதபு ராதிப மீனமொ டாமை
கிருட்டியி னுருவுடையாய்
கேசவ பூரண ராகவ தேவகி
புத்திர கரியவதா
மோதர ராம கிரீடிசொல் பாக
முழக்குக சிறுபறையே
மோதுறு சீர்நவ நீதபு ரேசன்
முழக்குக சிறுபறையே 7.

ஆதியு மீறுமி லாதபு ராணவு
னற்புத சரிதையெலாம்
ஆதிப ராசரன் வேதவி யாதன
வர்க்கரு மகனிவர்தாம்
ஓதிப காதைய னேகம தேயிவு
யிர்த்துணை யெனவுலகோர்
ஓதுவ ராடுவர் பாடுவர் நாடியு
ளத்திடை நிற்பாதாற்
சோதிகொள் வீடடை வார்பிற வித்துயிர்
துய்த்திடு கிலரெனினின்
தோமறு நாமம லாதெவ ருக்குமொர்
துப்புடை நலமுளதோ
மூதறி வானவ நாதர்க ளுத
முழக்குக சிறுபறையே
மோதுறு சீர்நவ நீதபு ரேசன்
முழக்குக சிறுபறையே. 8.

ஆலிலை மேலொரு பாலக னுய்வள
ரற்புத முறுவடிவும்
ஆர்கலி மீதர வாதன மாக
அணைத்தறி துயிலுருவும்
மேலிரு நாலுட னூறுள சீர்பதி
மெச்சிய வடிவுளநால்
வேதமு மோர்வரு சோதிகொள் தாமம்
விறுப்புறு சடிலமுநீள்
கோலம தாமவ தாரநன் மேனி
குறித்தது மிவைகளெலாங்
கோதறு சீரடி யார்தொழ நீகொள்
குணத்திரு வுருவலவோ
மூலமு மீறுமி லாவகி லேசன்
முழக்குக சிறுபறையே
மோதுறு சீர்நவ நீதபு ரேசன்
முழக்குக சிறுபறையே 9.

சேவடி நேர்தர வேதரு மாதியர்
செப்பிய வுரைகொடுபோய்ச்
சீர்பெறு வாரண மாநகர் மேவு
திருக்கிலன் மகனுடனே
ஆவது பேசியு நாடுகொ டாம
லடற்சமர் புரிவனெனு
ஆயவ னோதிய வாசக நீமுன
மைத்தது தவிருமதோ
கோவல னேகுட மாடுவி நோத
குகற்குயி ரனதுணைவா
கோகன காசனை பாசைசொ னுபக
குற்றுரு வுடையவனுய்
மூவடி மாவலி தாவெனு மாய
முழக்குக சிறுபறையே
மோதுறு சீர்நவ நீதபு ரேசன்
முழக்குக சிறுபறையே. 10.

சிறுபறைப் பருவ முற்றிற்று.

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — 3. கிளிப்போர்

[446-வது பக்கத் தொடர்ச்சி]

II

கிளிகள் ஆலமரத்தைவிடுத்துப் பறந்துபோய் வீரதங்காளின் மடியில்வீழ்ந்து, அரசிளங்கிளியை அண்ணன்மார் சிறைப்படுத்திச் சென்ற செய்தியைக் கூறி ஓலமிட்டன. வேங்கை உயிர்துறக்கையில் அபயமிட்டதையும் கிளிகள் அரற்றியதையும் கேட்டுச் சிந்தை கலங்கிய வீரதங்காள் நால்வர் காவலர் தன்னிடம் ஓடிவந்து பொற்கிளி சிறைப்பட்டதும் வேங்கை மடிந்ததும் கூறக்கேட்டுப் பொருக்கென எழுந்துசென்று, அவிழ்ந்து வீழ்ந்த கூந்தலோடு அண்ணன் காளிமன்னன் முன்நின்று கண்ணீருகுத்து நடந்தசெய்திகளையெல்லாஞ் சொல்லிப் புலம்பினாள். அவள் சொன்னதைக் கேட்டுத் தமையன் மீசைதுடிக்கக் கண் கலங்க எழுந்துவந்து தங்கையின்கைகளைப்பற்றிக் கண்ணீர்த் துளிகளைத் துடைத்து, "அம்மா தங்கையே, உனக்கு இடர்விளைத்த அந்த வேளாண் பயல்களுடைய ஊரைக் கொள்ளையிட்டுச் சிறைக்குச் சிறை திருப்பேனாயின் என்பெயர் தலையூர்க் காளி யன்று. அழாதே, உன் அரண்மனைக்குப் போ, நான் இன்றே படைதிரட்டிப் பொன்வள நாட்டைக் கொள்ளையடிக்கப் போகின்றேன்.'' என்று சொல்லித் தன்தங்கையையனுப்பிவிட்டு, பறையறைவித்து ஊர்க்குடிகளைத் தலையூர் மந்தையில் கூட்டுவித்து,

"நாட்டாரே, குன்றுடையான் மக்களாகிய சங்கனும் பொன்னனும் நமது எல்லைகடந்து இந்தக் காட்டில் நுழைந்து, நமது அருமைத்தங்கை வளர்த்த பொற்கிளியைச் சிறைப்படுத்திக் கிளிக்குக் காவலாயிருந்த வேங்கையையும் கொன்று சென்றார்களாம். எப்படியிருக்கிறது காரியம்!'' என்று சொல்லி, மீசை முறுக்கி, பின்னும், "இந்தவேளாண்பயல்களுக்கு இவ்வளவானால் இந்த வேடுவர்களுக்கு எவ்வளவு ஆகவேண்டும்? இனி இந்தப் பயல்களைச் சும்மாவிட்டால் நம் உயிருக்கே ஆபத்து வரும். ஆகையால் நாம் உடனே படைதிரட்டிச் சிற்றூலைப் பட்டணஞ்சென்று சிறைக்குச் சிறை திருப்பவேண்டும், என்ன சொல்கிறீர்கள்?'' என்றான்.

கூட்டத்திற் சிலர், "அந்த வேளாண்பயல்களுக்குத் தக்கபடி புத்தி புகட்டவேண்டும். அவர்களுக்கு வேடுவர் செய்தி தெரியாதுபோலும்! அவர்கள் நம்முடைய கிளியைச் சிறைப்படுத்தினார்கள்: நாம் அதற்கு மாறாக அவர்களுடைய தங்கையையே சிறைபடுத்திக் கொண்டுவர வேண்டும்'' என்றனர். மற்றும் சிலர் "நாம் இப்பொழுதே புறப்பட்டுச் சென்று சிற்றூலைப் பட்டணத்தைக் கொள்ளையிடவேண்டும்'' என்றனர். தலையூர்க்காளியின் மந்திரியாகிய கந்தன் எழுந்துநின்று, 'அரசே, அண்ணன்மார் வரத்தாற் பிறந்தவர், அவர்களூரைக் கொள்ளையிட்டு நாம் உயிரோடு திரும்புவது இயலாத காரியம். அவர்களது ஆட்சிக்குட்பட்டதும் நமக்குச் சமீபத்திலுள்ளதுமான திருக்காம்புலியூரை அவர்கள் அறியுமுன் ஒற்றைச்சிறை கொள்ளையிட்டுத் திரும்புவதே நலம்'' என்று கூறினான்.

இவர்கள் இன்னவாறு பேசிக்கொண்டிருக்கையில் அங்கே ஒரு மூலையில் எல்லோரும் கேட்கும்வண்ணம் பல்லி சொல்லிற்று. அங்கிருந்தோருடைய கண்ணும் மனமும் பல்லிசொல்லிய மூலையை நோக்கின. எள்ளிடவும் இடமில்லாத அந்தக் கூட்டத்திலே கிழவன் ஒருவன் எழுந்து நின்று, 'அப்பா, காளியண்ணா, இந்தப் பல்லி சொல்வதை இன்னதென்று அறியாமல் நாம் படையெடுத்துப் போவோமானால் குடிகேடு நேரிடும். குறிசொல்பவனை யழைப்பித்துப் பார்க்க வேண்டும்'' என்றான். நாட்டாரும் இக்கருத்தினராதல் கண்டு, காளிமன்னனும் அவ்வாறே குறிகாரனுக்கு ஆளனுப்பினான்.

கைத்தடி, தலைப்பாகை, ஏட்டுச்சுவடி, மிதியடி, துப்பட்டி, கைப்பை சகிதமாய் வயோதிகனான ஓர் குறிகாரன் வந்துசேர்ந்தான். வேடுவர்கள் அவனைக் கண்டு,'ஐயா, வாருங்கள், வாருங்கள்' என்றுசொல்லி அவனுக்கு இடம்விட்டு உட்கார்ந்தனர். குறிகாரன் தலையூர்க்காளியைக் கும்பிட்டு,'சுவாமி, என்னை அழைத்தவகை என்ன?' என்றான். காளி,'குறிகார, நாங்கள் ஒரு அவசரகாரியத்தை முன்னிட்டு இங்கே கூட்டம் கூடிப் பேசிக்கொண்டிருந்தோம். பல்லி பலபலவென்றடித்தது. அது சொன்னது நல்லதா, கெட்டதா, பலன் பார்த்துச் சொல்லவேண்டும்' என்றான்.

குறிகாரன், நாளையும் வேளையையும் கணித்துப் பார்த்து, 'சுவாமி, பாழ்மூலைப் பல்லி சொன்[illegible]களைப் பார்த்தால், எல்லாம் மாறாகத் தோன்றுகிறது. நினைத்தகாரியம் கைகூடாது. போகிறஇடத்தில் பொல்லாங்கு நேரிடும்' என்றான்.

"ஆமப்பா, குறிகாரா, நீ சொல்வதை நான் நம்புவதெப்படி? இந்தப் பல்லி சொல்லுகையில் நாங்கள் என்ன பேசிக்கொண்டிருந்தோம் என்பதை நீ கண்டு சொல்வாயானால், உன் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை உண்டாகும்' என்றான் காளிமன்னன்.

குறிகாரன் சிறிதுநேரம் மௌனமாயிருந்து கணித்துப் பார்த்து, 'சுவாமி, நீங்கள் எல்லோரும் கூட்டம் பேசி, கொள்ளையிடவேண்டுமென்று குறித்தீர்கள் என்று என் சாஸ்திரம் சொல்லுகிறது. இப்பொழுது கொள்ளைக்குப் போவீர்களானால் தலைகள் உருண்டு விழும், தளங்களெல்லாம் மடியும். இது தவறாது. எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். அப்பால் தங்கள் சித்தம்' என்றான்.

காளிமன்னன், "நல்லது, குறிகாரா, நீ சொல்வதில் இன்னும் எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. நாங்கள் எந்த இடத்தைக் கொள்ளையிடக் குறித்தோம் என்பதைச் சொல்வாயானால் நீவல்லவனே'' என்றான்.

குறிகாரன்,'அப்படியே செய்கிறேன் இதோ'என்று சொல்லித் தன் பையிலிருந்து ஒரு சிமிழை எடுத்துத் திறந்து, அதிலிருந்த மையைச் சிறிது எடுத்து ஒரு சிறுதட்டிலிட்டு ஒழுங்குபடத் தேய்த்துத் தன்முன் வைத்து, கண்மூடித் தனது வழிபடு கடவுளைத் துதித்து, கண்ணைத்திறந்து, தட்டிலிருந்த மையை இமை

கொட்டாமல் சிறிதுநேரம் உற்றுப் பார்த்து, 'இதோ' வளநாடு தெரிகிறது—வீரமலை தோன்றுகிறது—மதுக்கரை மாகாளியம்மன் கோவில் காண்கிறது—அந்தக் கோவிலில் களிதின்னும் மல்லன் காவல் புரிகின்றான். திருக்காம்புலியூர் தோன்றுகின்றது' என்ற சொல்லி, அங்குக் கூடியிருந்தவர்களையும் காளிமன்னனையும் நிமிர்ந்து பார்த்து, 'திருக்காம்புலியூரைக் கொள்ளையிடப் போகிறீர்கள். அது இப்பொழுது களிதின்னும் மல்லன் காவலில் இருக்கிறது. இப்பொழுது கொள்ளைக்குப் போவீர்களானால் இறப்பது நிச்சயம்' என்றான்.

அதுகேட்டுக் காளிமன்னன், 'மெச்சினேன். மெய், மெய்; முக்காலும் மெய். ஆயினும் நீ இது சொன்னது போதாது. நாங்கள் இப்பொழுதே சென்று திருக்காம்புலியூரைக் கொள்ளையிடவேண்டும். அதற்குரிய வழியையும் ஆராய்ந்து சொல்வாயானால், உனக்குப் பணமும் துப்பட்டியும் பரிசளிக்கின்றேன்' என்றான்.

குறிகாரன் சிறிதுநேரம் யோசித்து, 'சுவாமி, என் சிற்றறிவுக்கெட்டியதைச் சொல்கிறேன், கேளுங்கள்; நீங்கள் இன்றே கொள்ளைக்குப் போகவேண்டுமானால், மதுக்கரை மாகாளியம்மனுக்குத் தேனாலும் பாலாலும் பழத்தாலும் அபிடேகம் செய்யவேண்டும். அதன்பின்பு காளியம்மன் கோவில் வாசற் பிரதானியாகிய களிதின்னும் மல்லனுக்கும் பூசை முடிக்கவேண்டும். கம்பரிசி மாவிடித்துக் கருப்புக்கட்டி கலந்து, களிக்கிளறிப் பூசினிக்காயளவில் எழுபது உருண்டைகள் உருட்டி; நாற்பதுகல அரிசியைப் பொங்கலிட்டு, ஆட்டுக்கடா நூறு அளவாகச் சமைத்து, முட்டையிடுங்கோழி முன்னூறு சுட்டுவைத்து, கட்குடங்கள் நூறு கொண்டு போய்க் களிதின்னும் மல்லனுக்குப் பூசைசெய்வீர்களானால், மல்லன் இருதோளும் பூரித்துக் கொள்ளைக்கிடங்கொடுப்பான்' என்றான்.

காளிமன்னன் இதுகேட்டு, 'நல்லது, குறிகாரா, சொன்னபடியே செய்கிறோம். கொள்ளைக்குப் போய் வந்து உனக்கு வரிசைசெய்கிறேன்? போய்வா "என்று சொல்லி அவனுக்கு விடைகொடுத்தனுப்பினான்.

பின்பு காளிமன்னன் கூட்டத்தை நோக்கி 'நாட்டாரே, நாம் இன்று இரவே திருக்காம்புலியூரை ஒற்றைச் சிறை கொள்ளைகொள்ளவேண்டும். அதற்காக நாம் உடனே இவ்விடம்விட்டுப் புறப்பட்டால்தான் வழியில் காளியம்மனுக்கும் களிதின்னுமல்லனுக்கும் பூசை முடித்துவிட்டுத் திருக்காம்புலியூருக்குச் சென்று நாம் விடியுமுன் திரும்பமுடியும். ஆகையினால் வீட்டுக்குப் போய்ச் சோறுண்டு வீட்டுக்கோராளாக ஆயுதங்களோடு இன்னும் இரண்டுநாழிகைக்குள் இங்கேவிரைவில் வந்துசேருங்கள். அதற்குள் நானும் பூசைக்குரிய பொருள்களைச் சேகரித்துப் பயணத்துக்கு ஆயத்தஞ் செய்கிறேன்' என்றான். நாட்டார் அவனைக் கும்பிட்டுச் சென்றனர்.

பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

[449-வது பக்கத் தொடர்ச்சி]

3. சித்தாந்தங்கள்

அடிமைத்தனத்திற்கு அடிப்படையாயிருப்பது பேதைமை (ignorance) அல்லது குறுகிய நோக்கம் ஆகும். இது வெறுத்தற் குரியது மன்று; உருட்டித் துரத்தவு முடியாது. ஏனெனில், இதுவே மனோவளர்ச்சியின் முதற்படியாகும். நோக்கம் விரிவுபடப்பட, பகுத்தறிவு பெருகப்பெருக நோக்கம் பெருகும்.

"ஒவ்வொன்றும் அவ்வதன் சுவாபமாகிய மாறாத விதி அல்லது முறைப்படிக்கு இயங்குகின்றது; அதன் இயக்கங்களும் போக்கும் நம்முடைய பேதைமையையும் விவேகத்தையும் பொறுத்தனவுமல்ல, மாந்தர்களுடைய சுபிக்ஷத்தையே அநுசரித்து இயங்குவனவுமல்ல. எனின், நாம் தொழில்களில் பிரவிர்த்தித்து, பேதைமையை அகற்றி, அறிவை ஏன் வளர்க்கவேண்டும்?" என யாவரும் வினவலாம். பேதைமையின் மிகுதியால் ஆட்டப்படும் அறிவிலிக்கும், பூரணஞானம் ததும்பப்பெற்று, மனக்கலக்கமுறாது, தன்னிலைநின்று உலகினருடன் பழகி, பலன் புகழ் சுகம் என்ற அற்பபாவனைகளை அறவே ஒழித்துத் தன்னை ஓர் கிரியாதிபதியாக (Creative Agent) எண்ணிக் கர்மங்களை மேற்கொண்டு, ஊக்கத்துடன் தொடர்ந்து, கிரமப்படி செய்துவரும்ஞானிக்கும் வித்தியாசம்இல்லையோ? தன் இஷ்டப்படிக்குமண்ணைக் குலாலன் பற்பலவிதங்களில் உபயோகித்தல்போல் சர்வஜீவராசிகளும் பிரபஞ்சகர்த்தாவினால் ஆட்டிவைக்கப்படுவன என்ற விஷயத்தைப் பற்றிய அறிவும் அறிவின்மையும் ஒன்றுமோ? உள்ளறிவு மாண்பினால் வருவனவற்றை ஏற்றுச் சிறக்கின்ற நிரனும், சுயவிசாரிப்பும் தன்வயமு மற்றுப் பாடுபடும் மூடனும் ஒரே இனத்தவ ரென்னலாமோ.

மனப்பயிற்சியால் பெற்ற பகுத்தறிவின் முதிர்ச்சியாற்றான் ஒருவன் தன்னையும் உலகாதிகளையும் உள்ளபடி அறியக்கூடும். இதற்குப் பரந்து ஆழ்ந்த அநுபவம் அவசியமானது. பலதிறப்பட்ட அநுபவங்களின் பலனான அறிவே அறம் எனப்படுவது. பகுத்தறிவைத் திடப்படுத்துவது அநுபவமாகும். இவ்வநுபவத்தினின்று விதி அல்லது முறைமை என்பதின் பொருள் வெளியாகும். இதுவே புலக்கட்டுக்கும் மனவமைதிக்கும் உள்ளானந்தத்திற்கும் ஆதாரமாவது, இது பந்தங்களினின்று விடுபடுதற்கான உபாயம்; இன்னலிடர்களுக் கெல்லாம் வித்துக்களான பிரேமைகளைத் திருத்தித் தூயனவாக்குவது இதுவே.

சுதந்திரமென்பது, முறையில்லாது இஷ்டப்படி நடக்கச் செய்வதற்கோ, அல்லது அதற்கு உதவுதற்கோ உரியவோர் சக்தியன்று; அங்குமிங்கும் ஓடியாடித் தேடிப்பெறுதற்கான புறப்பொருள்களி லொன்றுமன்று. மற்று சுயகுணத்தையும், உலகின் மெய்யியல்பையும் களங்கமற அறிந்துகொண்டு பரம்பொருளின் முறையையொட்டி ஒழுகஉதவும் அகச்சக்தியே சுதந்திரமாகும். இச்சக்தியுடன் விளங்குகின்றவனே அறவோன்.

ஆசாபாசங்களையும் பிரேமைகளையும் சுளுக்கிட்டு அடக்குதலே விவேகத்தின் குணாதிசயமென முடித்தல் இழுக்காகும். பிரேமைக்கும் விவேகத்திற்கும்

உள்ள வித்தியாசம் யாதோவெனில், முன்னது புறப்பொருள்களால் தாக்கப்படும்பொழுது வீண் பாவனைகளில் உழன்று உலப்புறுகின்றது; ஆயினும், உள்ளுணர்ச்சி நிகழ்ச்சிகளையும் வெளிப்பொருள்களையும் ஊன்றிப்பார்த்து முன்னதைச் சீர்ப்படுத்தி உயர்த்துகின்றது விவேகம்; அகம்புற வாராய்ச்சிகளுக்கும், பல்வகை அநுபவங்களுக்கும், சுபவறிவுக்கும் முன்னது இடங்கொடுப்பதில்லை; எனினும், இவைகள் மூலமாகத்தான் பின்னது உரமும் வளமும் பெற்று உயர்வது; ஒருவனுடைய அடிமைத்தனத்தையும், புல்லறிவையும், துக்க நிலைமையையும் முன்னது ஞாபகப்படுத்துவது; எனினும், அகச் சக்தியை வெளிப்படுத்தி ஆனந்திக்க அநுகூலிப்பது பின்னது என்பதேயாம்.

சரீர வமைப்பு, மனப்பாங்கு போக்குக்களை யொட்டியவரையிலும் மாந்தர்க்குள் ஒற்றுமை இருக்கின்றதெனவும், ஆகையினாற்றான் ஒருவரையொருவர் ஒருவாறு அறியமுடிகின்றதெனவும், இக்காரணங்கள் பற்றியே பரஸ்பரவிசுவாசம் அன்பு நேர்மைகளுடன் ஒருமித்துவாழ்வதற்கு மாந்தர்கள் முயற்சிசெய்ய வேண்டுமெனவும், உலகாதிகளெல்லாம் ஒரே மூலவஸ்துவின் உருக்களாய் நிற்றலே, ஒரே மூலசக்தியால் நிரப்பப்பெற்றிருத்தலே, மேற்சொல்லியவைகளுக்குக் காரணமெனவும் முன்னர்க் கூறியுள்ளோம். ஒவ்வொரு ராசி ஒவ்வொரு இனம் ஒவ்வொரு வகுப்புக்கும் பொதுக்குணங்கள் சில இருக்கின்றன. ஆனால், அங்கங்களுள் (members) சிற்சில குணாதிசயங்கள் மேம்பட்டு நிற்கின்றன. அல்லது பிரத்தியேகமாகச் சிலகுணங்கள் தோன்றுகின்றன. இவற்றிலிருந்தே குறைவு (imperfection) நிறைவு (perfection) என்ற பாவனைகள் உண்டாகின்றன. உண்மையில், உலகாதிகளெல்லாவற்றையும் பாரபக்ஷமில்லாமல் நிதானித்துப் பார்ப்போமாயின் குறைகளெனக் கருதப்படுவனவெல்லாம் மறைந்துபோய்விடும். தீயர்களையும், அங்கஹீனர்களையும் பார்த்துக் கடவுள்மீது பழிசுமத்தல் மதியின் குறைவாகும். சர்வசக்தி பொருந்தி எதையும் உண்டுபண்ணவல்லதான பரம்பொருளால் ஆகாதது ஒன்றுமில்லை; பல்வேறு தோற்றங்களிலும் உருவங்களிலும் அமைப்புக்களிலும் குணங்களிலும் மேற்சொல்லியவைகளும் சில ஆகும் என்பதை அறியவேண்டும். "துர்ப்பாக்கியர்" களை ஏனையோருடன் ஒத்துப்பார்த்த பின்னல்லவோ அங்கஹீனர்களெனவும் தீயர்களெனவும் நொந்து கடிந்து நாம் குறைகூறுகின்றோம்; ஆதலின், அவர்களை யொட்டியவரையிலும் குற்றமுமில்லை, குறையுமில்லை போலும்.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[454-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 2.

ஆண்டனி:—பொறுமையாயிருங்கள், நல்ல வென் நண்பர்காள் (1), அதனை யான் வாசித்தலாகாது. ஸீஸர் உங்கள்பால் எவ்வளவு அன்புவைத்திருந்தானென்பதை நீங்கள் தெரிந்துகொள்வது தகுதியன்று (2). நீங்களோ மரமல்லர், நீங்களோ கல்லல்லர், மற்று மனிதர்; மனிதராயிருந்து, ஸீஸரின் மரணசாஸனத்தைக் கேட்பீராயின், அது உங்களைக் கனற்றிவிடும்—(3) உங்களை வெறிகொளச்செய்துவிடும்; அவனுக்கு நீங்கள் பின்னுரிமையுடையவர்களாயிருக்கின்றீர்களென்பதை நீங்கள் அறியாதிருப்பதே நலம். (4), ஏனெனில், அறிவீராயின், அதனால் யாது விளையுமோ!

நான்காம் நகரவாசி:—வாசி அம் மரணசாஸனத்தை; நாங்கள் அதனைக் கேட்டே தீர்வோம். ஆண்டனி, நீ அம்மரணசாஸனத்தை எங்களுக்கு வாசிக்கத்தான் வேண்டும்—ஸீஸரின் மரணசாஸனம்!

ஆண்டனி:—பொறுமையாயிருப்பீர்களோ? சிறிதிங்குத் தங்கியிருப்பீர்களோ? இதுபற்றி நானுங்களுக்குச் சொல்லியதால், வைத்தகுறியைக் கடந்துமேல் எய்துவிட்டேன். (5) ஸீஸரைக்குத்திய கத்தியையுடைய அப் பெரியமனிதர்களுக்கு நான் பிழையிழைக்கின்றேனென அஞ்சுகின்றேன் (6)— ஆம், அதற்கு அஞ்சவே அஞ்சுகின்றேன் யான்.

நான்காம் நகரவாசி:—துரோகிகள் அவர்கள்; பெரிய மனிதர்களாம்!

ஜனங்கள்:—மரணசாஸனம்! பத்திரம்!

(1) எப்பொழுதும் எவ்விடத்தும் பொதுசனங்கள் எடுப்பார்கைப் பிள்ளை. "நண்பர்காள், சகோதரர்காள்" என்று அவர்களை ஒருமுறைக்குப் பன்முறை அருமையுடன் அழைப்பவன் சூழ்ச்சிக்கு எளிதில் ஆளாகி, வேறொருவன் வந்து நயமொழிகளால் கலைக்கும் வரையில், அவன்வாய் பார்த்துவாழத்தலைப்படுகின்றனர். ஷேக்ஸ்பியரால்விளக்கப்பெற்ற நிரந்தர உண்மைகளில் இது வொன்று.

(2) பொதுஜனங்களைத் தன் இஷ்டம்போல் ஆட்டிவைப்பதற்குவேண்டிய சூழ்ச்சியும் அதிகமும் ஆழமாயிருக்கவேண்டா. ஸீஸரின் மரணசாஸனத்தை வாசிக்க விரும்பாதவன்போல் நடித்துக்கொண்டே, ஸீஸர் சனங்களிடத்தில் வைத்திருந்த அன்பிற்கு அதுவே சான்று என்றும், தன்னுடைய செல்வத்தை அவன் சனங்களுடைய நன்மைக்கே வைத்துவிட்டுச் சென்றிருக்கின்றான் என்றும், அதனில் அடங்கிய விஷயங்களைக்குறிப்பிட்டுச் சனங்களின் ஆவலை அதிகப்படுத்தும் இந்தத் தந்திரம் மிகவும் சாதாரணம். ஆயினும் சனங்களைத் தூண்டுவதற்கு அவ்வளவே போதும்.

(3) மரமும் கல்லும்போல் ஓர் உணர்வற்றபொருளாய் நீங்கள் இருந்தாலன்றி இம் மரணசாஸனத்தைக் கேட்டபின் ப்ரூட்டஸ்முதலியவர்கள்மீது பொங்கியெழும் உங்களுடைய சீற்றத்தை மாற்றலரிது—என்பது பொருள்.

(4) பின்னுரிமையுடையவர்—"வார்சுதார்"-heirs.

(5) என்னையுமறியாமல் நான் எண்ணியதற்கு அதிகமாய் இயம்பிவிட்டேன்—என்பது பொருள்.

(6) இதனை வாசிப்பேனாயின், நீங்கள் ப்ரூட்டஸ் முதலியவர்களுக்குத் தீங்குசெய்யத் தலைப்படுவீர் என்பது நிச்சயம். அவர்களைக்கெடுக்க நான் விரும்பவில்லை—என்பது பொருள். ஸீஸரைக்குத்திய கத்தியுடைய பெரியமனிதர், என்ற வாசகத்தின் ஒவ்வொருசொல்லிலும் நஞ்சூட்டும்தந்திரமுடையதன்மை வெளிப்படை.

(7) ஸீஸரின் சவத்தைக் காட்டிச் சனங்களின் மனதை இளகவைத்துப் பிறகு அம்மனதில் ப்ரூட்டஸ் முதலியவர்

இரண்டாம் நகரவாசி:—கயவர்கள்! கொலைபாதகர்கள்! மரணசாஸனம்! மரணசாஸனத்தைப் படி.

ஆண்டனி:—ஆயின், அம் மரணசாஸனத்தைப்படிக்குமாறு என்னை வற்புறுத்துகின்றீர்களோ? எனின், ஸீஸரின் உடலத்தைச் சுற்றி வளைந்து நில்லுங்கள், இம் மரணசாஸனம் செய்த அவனை உங்களுக்கு நான் காட்டுகின்றேன். (7), நான் இறங்கலாமோ? அநுமதி தருகின்றீர்களோ? (8).

ஜனங்கள்:—கீழே வா.

இரண்டாம் நகரவாசி:—இறங்கு.

[ஆண்டனி இறங்குகின்றான்]

மூன்றாம் நகரவாசி:—உனக்கு அநுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது. (9)

முதல் நகரவாசி:—சவப்பெட்டியினின்று விலகி நில்லுங்கள்; சவத்தினின்று விலகிநில்லுங்கள்.

இரண்டாம் நகரவாசி:—ஆண்டனிக்கு இடம் (10). —நிகரிலாப் பெருந்தகை ஆண்டனி!

ஆண்டனி:—வேண்டா, இப்படி என்னை நெருக்காதீர்—விலகி நில்லுங்கள்.

ஜனங்கள்:—பின்னேகுங்கள; இடம்! தள்ளுங்கள் பின்னே!

ஆண்டனி:—கண் ணீருங்களுக் குண்டாயின் அதனைச் சொரிதற் கிப்பொழுது ஆயத்தமாகுங்கள். இவ்வுத்தரீயத்தை நீவி ரனைவீரு மறிவீர். ஸீஸர் இதனை முதலில் அணிந்தநாள் என் நினைவி லிருக்கின்றது. ஓர் வேனில் மாலை, தன் கூடாரத்தில், நெர்வியரை அடக்கியநாள் அது. (11)—நோக்குங்கள், காஸ்ஸியஸின் கத்தி ஊடுருவி ஓடியது இவ்விடத்தே. அழுக்காறுடைய காஸ்க்கா எப்படிக் கிழித்திருக்கின்றான் பாருங்கள் (12). இதனூடு அன்பு நனி பெற்றிருந்த (13) ப்ரூட்டஸ் குத்தினான்; அந்தப் பாதக எஃகினைப் பறித்தெடுத்த வாங்கே, ப்ரூட்டஸாம் இத்துணைத் தயையின்றிக் குத்தினனோ அல்லனோ என்று தேர்ந்துகொள்ளக் கடைவாயில் கடுகிமுடுகியதென்ன ஸீஸரின் இரத்தம் அதனைத் தொடர்ந்தவண்ணம் குறித்துக்கொண்மின் (14). ஏனெனில், ஸீஸருக்கு ப்ரூட்டஸ் குலதெய்வம், என்பதை நீங்கள் நன்கறிவீர் (15). ஓ, தெய்வங்காள், ஸீஸர் அவனைத்தான் எத்துணை அருமையாய்க் காதலித்தான் என்பதை நீங்களே ஓர்ந்து சொல்லுங்கள்! இரக்கமற்ற குத்துக்கள் எல்லாவற்றிலும் மிகமிகக் கொடியது இதுவே (16). அவன் குத்துவதைப் பெருந்தகைஸீஸர் பார்த்தவளவில், நன்றியிலாமையே, துரோகிகள்தம் கரங்களினும் மிக்க வலியதாகி அவனை முற்றிலும் வென்றொழித்துவிட்டது (17). அப்பொழுதே பிளந்ததுகாண் ஆற்றல் மிகவுடைய அவனிதயம் (18). இந்த உத்தரீயத்தால் தன் முகத்தினைப் பொத்திக்கொண்டு, பெருகிய குருதி பெருகியவாங்கே, பாம்பேயின் உருவச்சிலையின் அடியிற்றானே பெரியோன் ஸீஸர் பெயர்ந்து விழுந்தனன் (19). ஓஹோ! என்னே வீழ்வு அது என்றன் சுதேசிகாள்! குருதிபெருகும் இரண்டகச் செய்கை நம்மீது செழித்துச் சுழல, அந்தப்பொழுதே, நானும் நீங்களும் நாமெல்லோரும் கீழுற வீழ்ந்தோம் கண்டீர் (20). ஆகா! இப்பொழுது நீங்கள் அழுகின்றீர். இரக்கத்தின் வலிமையை உணர்கின்றீரென்பதைக் காண்கின்றேன். தயையுடைய துளிக ளிவை. பரிவுடைய ஆன்மாக்களே, என்ன விது! நம் ஸீஸரின் ஆடை புண்படக்கண்டே கலுழ்கின்றீர்களோ? இதோ பாருங்கள்; சதியாளர்களால் சிதைந்திங்கு அவனே கிடக்கின்றான். (21)

முதல் நகரவாசி:—ஓ! இரக்கம் மிகுந்த காட்சியே!

இரண்டாம் நகரவாசி:—ஓ! பெருமைசால் ஸீஸரே!

கள்மீது பகையினை அழுந்தச் செருகவேண்டும் என்பது ஆண்டனியின் கருத்து.

(8) இறங்குகின்றதென்பது, மேடையைவிட்டிறங்கிக் கீழே பெட்டியில் வைக்கப்பெற்றிருக்கும் ஸீஸரின் சவத்தினருகில் வருவது. ஜனங்களின் அநுமதி கேட்பதெல்லாம் கபடநாடகம்.

(9) ஜனங்களோ, தங்கள் அதிகாரத்தைக் காட்டும் குராலுடன் அநுமதிதருகின்ற இந்தப் பரிபவம் கருத்தினுட் கொள்ளத்தக்கது.

(10) ஆண்டனி வருவதற்கு இடம்விடுங்கள்—என்பது பொருள்.

(11) ஸீஸர் செய்துவென்ற அருமையான போர்களில் நெர்வியர்மீது கொண்ட வெற்றி மிகவும் அருமையானது. ஆண்டனி, இப்பொழுது ஸீஸரின் சவத்தின் மேலிருந்து எடுத்து ஜனங்களுக்குக் காட்டுகின்ற அவ்வுத்தரீயமானது, வேனிற் காலத்தில், நெர்வியரை வென்றநாள், மாலைப் பொழுதில் ஸீஸரால் முதல்முதல் அணிந்துகொள்ளப்பட்டதென்பது தனக்கு இன்னும் நினைவு இருக்கின்றது என்று கூறுமாற்றால், ஸீஸரின் போர்த்திறமையும் பகைவரையடக்கித் தம் தேயத்தை அவன் காத்த நன்மையும், மிகப் பெரியதென்பதைக் குறிப்புணர்த்துகின்றான்.

(12) ஸீஸரைச் சதியாளர் குத்தியபோது அவன் அணிந்திருந்த உத்தரீயம் அங்கங்கே கிழிந்திருப்பதைக் காட்டிக் காட்டி இவன் சனங்களுக்குக் கோபம் மூட்டுகின்றான். ஸீஸரைக் கொலைசெய்தபோது ஆண்டனி அங்கு இல்லை. இருந்திருப்பினும், இன்னார் குத்திய இடம் இது எனத் தெரிந்துகூறல அருமை. ஆதலின் இவையெலாம் ஆண்டனியின் கற்பனைகள்.

(13) அன்புநனி பெற்றிருந்த—ஸீஸரின் அன்பினை மிகவும் பெற்றிருந்த பாதக எஃகு = பாதகம் செய்வதற்குக் கருவியாயிருந்த வாள்.

(14) ப்ரூட்டஸ் குத்திய இடம் இதுவென்று அவ்வுத்தரீயத்தில் காட்டி, அங்கு இரத்தம் உறைந்திருப்பதையுங் காட்டுகின்றான். குத்தியகத்தியை இழுப்பதுடன் இரத்தம் பீறிவெளிவந்தது, ''ஆகா, ப்ரூட்டஸோம் இக்காரியம் செய்வனோ, ஒருகால் வேறெவனேயோ, என்று தெரிந்துகொள்வதற்கு அவ்விரத்தம் ஸீஸரின் உள்ளிருந்து வெளியோடி வந்ததுபோன் றிருக்கின்றது—என்கின்றான்.

(15) ஸீஸரோ ப்ரூட்டஸைத்தன் குலதெய்வமாகக் கருதியிருந்தான்—என்பது பொருள்.

(16) இது என்பது ப்ரூட்டஸ் குத்திய குத்து.

(17) ப்ரூட்டஸை ஸீஸர் வரம்பில்லாத அருமையுடன் பாராட்டிவந்தான். அவனுக்கு எவ்வளவோ உபகாரங்கள் செய்திருக்கின்றான். ஒருகால், ஸீஸரைப்பகைத்துப் பொருத ப்ரூட்டஸ் தோல்வியுற்று ஸீஸரின் கையிலகப்பட்டபோது, ஸீஸர் அவனை மன்னித்து, கொல்லாமல் விட்டதுமன்றி, தன் உற்றநண்பனாக அவனை ஏற்றுக்கொண்டு, அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்களும்கொடுத்திருந்தான். இந்த ப்ரூட்டஸ், சிறிதும் நன்றியில்லாமல் தன்னைக் கொல்லவருவதைக் கண்ட ஸீஸர், திகைப்படைந்து செயலின்றிச் சும்மா விருந்துவிட்டான். இல்லையெனில் இத்துரோகிகளின் புயவலி ஸீஸருக் கொரு பொருளா. இவர் கரங்களல்ல, ப்ரூட்டஸின் நன்றிக்கேடே ஸீஸரை வென்றதாயிற்று—என்பது பொருள்.

(18) ஸீஸரின் திண்ணிய மார்பைப் பிளக்கக்கூடிய வலிமை எவருக்கும் இல்லை. ப்ரூட்டஸின் நன்றிக்கேடு ஒன்றுமே அவன்மார்பைப் பிளந்ததெனல் வேண்டும்.

(19) ப்ரூட்டஸ் தன்னைக் குத்தவருவதைப் பார்க்கப் பொறுக்காமல் ஸீஸர் தன் முகத்தினை மூடிக்கொண்டான்—என்பது பொருள்

(20) ஸீஸர்மாத்திரம் வீழ்ந்தானென்று எண்ணுகிறீர்கள். அவன் விழுவதுடனே, நாமெல்லோரும் சேர்ந்து வீழ்ந்தோம் என்று எண்ணிக்கொள்ளுங்கள்.

மூன்றாம் நகரவாசி:—ஓ! பாழுமிந் நாளே!

நான்காம் நகரவாசி:—ஓ! துரோகிகளே, துஷ்டர்களே!

முதல் நகரவாசி:—இரத்தம்பெருகும் ஓ, கொடிய தோற்றமே!

இரண்டாம் நகரவாசி:—பழிவாங்கியே தீர்வோம்; பழி வாங்குங்கள்—புறப்படுங்கள்—தேடுங்கள்—பொசுக்குங்கள்— கொளுத்துங்கள் —கொல்லுங்கள்—வதையுங்கள்—சதியாளன் ஒருவனையும் உயிருடன் விடலாகாது (22).

ஆண்டனி:—இருங்கள், என் சுதேசிகாள், இருங்கள்.

முதல் நகரவாசி:—சும்மா விருங்கள்! பெருந்தகை ஆண்டனி பேசுவதைக் கேட்போம்.

இரண்டாம் நகரவாசி:—அவன் இயம்புவதைக் கேட்போம், அவனைப் பின்தொடர்ந்து செல்வோம், அவனுடன் சேர்ந்து மாள்வோம் (23).

ஆண்டனி:—நல்ல வென் நண்பர்காள், எனதினிய நண்பர்காள், இத்துணைத் துண்ணெனுங் கலகத்தின் வெள்ளத்தை நா னுங்களிற் கிளப்பிவிட்டவனாக வேண்டா. இக் காரியத்தைச் செய்திருக்கு மவர்களோ பெருமைசான்றவர். இதனைச் செய்யவைத்த அவர்தம் தனித்த விரோதங்கள் என்ன இருந்தவோ, யானறியேன் (24)—அறிவும் பெருமையும் வாய்ந்தவர் அவர்கள், காரணங்களுடன் உங்களுக்கு உத்தரஞ் சொல்வார்கள் என்பதற்கும் ஐயமில்லை (25). நண்பர்காள், உங்கள் இதயங்களைக் கவர்ந்துசெல்ல நானிங்கு வரவில்லை. ப்ரூட்டஸைப் போல் நான் நாவன்மை யுடையவனல்லன்; மற்று, நீங்களனைவரும் என்னை அறிந்திருக்கும்வண்ணம், என் நண்பன்பால் நேயம் வைத்தவோர் கபடில்லா வெள்ளைமகனே நான். அவனைப்பற்றி இங்கு யான் பேசுவதற்கு அநுமதியளித்த அவர்களும் இதனை நன்கறிவார் (26). மனிதர்தம் குருதியைப் பொங்கவைப்பதற்குரியவோர் (27) நுண்மதியேனும், வாய்மொழியேனும், தகுதியேனும், செயலேனும், செல்லுஞ் சொல்லேனும், பேசுந்திறமையேனும் எனக்கில்லை: தோன்றியபடியே நேரே நான் பேசிக்கொண்டு போகின்றேன், அவ்வளவே; சொல்வதெல்லாம் உங்களுக்கே தெரிந்தவைகள் தானே. இனிய ஸீஸரின் புண்களை-ஏழை ஏழை ஊமை வாய்கள்-உங்களுக்குக் காட்டி, எனக்குப் பதிலாய் அவைகளைப் பேசும்படி ஏவுகின்றேன் (28). மற்று, நான் ப்ரூட்டஸாகவும், ப்ரூட்டஸ் ஆண்டனியாகவும் இருந்தோமேயாயின், உங்கள் உணர்வுகளைக் கொந்தளிக்கக் குழப்பிவிட்டு, உரோமாபுரியின் கற்களையும் கிளம்பிக் கலகம்செய்யும்படி தூண்டவல்ல நாவொன்று ஸீஸரின் புண்கள் ஒவ்வொன்றிலும் வைத்தவொரு ஆண்டனியா யிருந்திருப்பான். (29)

ஜனங்கள்:—நாங்கள் கலகம் செய்வோம்.

முதல் நகரவாசி:—ப்ரூட்டஸின் வீட்டை எரித்துக் கொளுத்துவோம்.

மூன்றாம் நகரவாசி:—ஆயின், புறப்படுங்கள். வந்து, சதியாளர்களைத் தேடிப் பிடியுங்கள்.

ஆண்டனி:—இன்னுங் கேளுங்கள், சுதேசிகாள், இன்னும் யான் சொல்லஇருப்பதைக் கேளுங்கள்.

ஜனங்கள்:—ஓஹோ! சும்மா விருங்கள், ஆண்டனி பேசுவதைக் கேளுங்கள்; பெருந்தகை மிகுந்த ஆண்டனி (30).

ஆண்டனி:—என்ன விது, நண்பர்காள் இன்னதென்று அறியாமல் நீங்கள் ஏதோ இயற்றுதற் கேகுகின்றீர்! இத்தகைய உங்கள் அன்பிற்கு ஸீஸர் பாத்திரனாயது எங்ஙனம்? ஐயகோ, நீங்கள் அறியீர்—ஆயின், யானுங்களுக்குச் சொல்லவேண்டும். யான் சொல்லிய அம் மரணசாஸனத்தை மறந்துவிட்டீர். (31)

(21) 'பெரியமனிதர்' என்றபேச்செல்லாம் விட்டு, சதியாளர் என்றும், நன்றியில்லாதவர்களென்றும், ஆண்டனி மெல்லமெல்ல எடுத்துரைக்கத் தலைப்படுகின்றான்.

(22) ஆண்டனி, வேண்டியபடியே ஜனங்கள் இவன் சொற்களுக்கு வசமானார். இவன் பேசத் துவக்குங்கால், "ப்ரூட்டஸைப்பற்றி இவன் ஒன்றும் பொல்லாங்கு சொல்லாதிருத்தலே நலம்" என்ற தன்மையில் நின்ற ஜனங்கள் அது முடிவதன்முன் ப்ரூட்டஸ் முதலாயினோரைக்கொன்றெரிக்கப் புகுகின்றனர்.

(23) ஆண்டனி ஆட்டிவைத்தபடியெல்லாம் ஆடுவதற்குச் சனங்கள் ஆயத்தமா யிருக்கின்றனர்.

(24) ஸீஸரின் மேன்மை அன்பு முதலியவைகளை உங்களுக்கு எடுத்துக்காட்ட நினைத்தேனே யன்றி, சதியாளர்களை நீங்கள் பகைத்தழிக்கவேண்டுமென்னுங் கருத்து எனக்கில்லை. இவ்வளவு நல்லவனாயிருந்த ஸீஸரை அவர்கள் பொதுஜன நன்மைக்கென்று கொன்றதாக விளம்புவதெல்லாம் பொய். அவர்களுக்கு, தம்மைப்பற்றிய விரோதம் ஏதோ ஸீஸரின்மீது இருந்திருக்கவேண்டும். அது என்னவென்று எனக்குத் தெரியாது, என்பது பொருள்.

(25) ப்ரூட்டஸின்மீது தனக்கு யாதும் பகையில்லை என்ற பான்மையில் நடுநிலை வழுவாது பேசுபவன்போல் பாசாங்கு செய்கின்றான்—இதனால், தக்க காரணங்கள் அவர் கூறவில்லை என்பது காட்டப்பட்டது.

(26) சூதுவாதற்றவனென்று என்னை மதித்து, ஸீஸரினிடத்தில் எனக்குள்ள நேயத்தினாலேயே நான் இங்குப் பேச விரும்புகின்றேன் என்றெண்ணி, எனக்கு அநுமதி தந்த பேதைகள்அவர் — என்று தனக்குள்ளே பரிகசிக்கின்ற குறும்பு இதனுள் அடங்கியிருக்கின்றது.

(27) குருதியைப் பொங்கவைப்பது = கோபாவேசம் மூட்டுவது.

(28) பாதகர்கள் கையினால் பட்ட ஸீஸரின் புண்களை உங்களுக்குக் காட்டுகின்றேன். பேசமாட்டாவாய்கள்போல் அப்புண்கள் பிளந்திருக்கின்ற காட்சியைக் கண்டவளவிலேயே, ஸீஸரின்பால் இரக்கமும் அவனைவதைத்தவர்கள்மீது பகையும் உங்களுக்கு உண்டாகாமற்போகுமா—என்பது கருத்து.

(29) எனக்குமாத்திரம், ப்ரூட்டஸைப் போன்ற தந்திரமும் சொல்வன்மையும் இருக்குமானால், ஸீஸர் வதையுண்ட பாவமிதனை உங்களுக்குக் கூறிக்கூறி நீங்கள் அந்த ப்ரூட்டஸ்முதலியவர்களுக்கு விரோதமாய்க் கலகம் செய்யும்படி தூண்டக்கூடியவனா யிருப்பேன். அந்தத் திறமையேனும் விருப்பமேனும் எனக் கில்லாமையாலல்லவோ, ஸீஸரின் புண்களைமாத்திரம் உங்களுக்குக் காட்டி அதன் மேலொன்றுஞ் சொல்லத்தெரியாதவனும் சொல்லவேண்டாதவனுமாய்ச் சும்மா இதனோடு நின்றுவிடுகின்றேன்—என்பது பொருள். ஜனங்களைத் தூண்டுவதற்கு இதைவிட வேறு என்ன வேண்டுமோ!

(30) பெருந்தகை மிகுந்த 'ப்ரூட்டஸ்' என்று இவர் அவனைப் புகழ்ந்தவாய் மூடுவதற்கும் நேரமில்லை. இதற்குள் அவன்புகழ் புலர்ந்துபோய் ஆண்டனியின் புகழ் அங்குச் சுரந்துவிட்டது. இரக்கமுந் தகவுமின்றித் தம் நாவன்மையை நன்கு பயிலக்கற்றிருக்கின்ற வன்னெஞ்சகர்க்கே எந்நாளும் எவ்விடத்தும் ஜனங்கள் எளிதில் இரையாகிவிட, இன்னவர் பேதைமையைக்கொண்டு அவ்வரசதந்திரிகள் தம்முடைய ஆக்கத்தைத் தேடிக்கொள்கின்றனர்.

(31) என்ன நினைத்து என்ன செய்கிறார் என்பது அறியாமலே ஜனங்கள் ஆரவாரத்துடன் மண்டுகின்ற மதியினைக்காட்டுதற்கே, ஷேக்ஸ்பியர் அவர்களை யிம் மரணசாஸனத்தை மறக்கவைத்தார். ஜனங்கள் வற்புறுத்துவதால் தான் அதனைப்படிக்க இசைந்தவன்போல் முன் நடித்த ஆண்டனி, தானே இப்போழுது அதனை நினைவுபடுத்தி வற்புறுத்தவேண்டி வருகின்றது.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[456-வது பக்கத் தொடர்ச்சி]

உறங்காதா ருறங்குவிக்க வந்ததோரு பச்சைமலே.

இல்க்குவனல் உறுப்பறநின் றலறியவவ் வரக்கியின் கூக்குரல் திக்கனைத்துஞ்சென்று தேவர்தம் செவியையும் துற்றிட, மூக்கினின்று பெருகிய சோரியின் ஈர்முற்றுக் கரைந்தது உலகம். முன்னே,

பொடியுடைக் கான மெங்குங்
குருதிநீர் பொங்க வீழ்ந்த
தடியுடை யெயிற்றுப் பேழ்வாய்த்
தாடகை தலைக டோறும்
முடியுடை யரக்கற் கந்நாண்
முந்தியுற் பாத மாகப்
படியிடை யற்று வீழ்ந்த
வெற்றியம் பதாகை யொத்தாள்

[புழுதியுடைய வனமெல்லாம் இரத்தவெள்ளம் பெருக விழுந்த, மாமிசம் படிந்த பற்களோடுகூடிய பெரியவாயையுடைய, தாடகையானவள், ஒவ்வொரு தலையிலும் ஒவ்வோர் முடியுடைய இராவணனுக்கு வரவிருக்கும் கேட்டிற்கு அன்று முன் அபசகுனமாய் அறுந்து வீழ்ந்த அவன் வெற்றிக் கொடியை ஒத்தாள்]

என் றெடுத்துக்காட்டினர் கம்பர். இராமபாணத்தால் இற்றுவீழ்ந்த பாட்டி இராவணனுக்கோர் துர்நிமித்தளவே தொலைந்தனள். சூர்ப்பணகை இராவணனுக்கு இன்னும் நெருங்கிய உறவினளாதலாலும், அத் துர்நிமித்தத்தின் பலன்வந்து சேரும்நாள் அவ் வரக்கர் தலைவனுக்கு நெருங்கிவிட்டதாலும்,

கொலைது மித்துயர் கொடுங்கதிர் வாளினக்கொடியாள்
முலைது மித்துயர் மூக்கினை நீக்கிய முறைமை
மலைது மித்தென விராவணன் மணியுடை மகுடத்
தலைது மித்தற்கு நாட்கொண்டதொத்ததோர் தன்மை

[கொல்லாமல், சிறந்த கொடிய ஒளியுள்ள வாளினல் இலக்குவன், இந்தச் சூர்ப்பணகையின் முலையை அறுத்து, நிமிர்ந்த மூக்கையும் நீக்கிய காரியமானது—மலையின்சிகரத்தைத் துணிப்பதுபோல், இரத்தினங்கள் பதித்தகிரீடத்தையணிந்த இராவணனது தலைகளை அறுத்துத்தள்ளுவதற்கு நல்லநாள் பார்த்துக் காரியத்தை ஆரம்பித்தஒரு தன்மையைப் போன்றிருந்தது]

எனப் பயன்தெரிந்து பேசும் நம்கவிவரர் சாதிக்கின்றனர். இராவணன் சிரத்தை உருட்டுமுன் இராமன் இங்குச் செய்வதற்குரிய கருமங்கள் சிலவுள. கரன் முதல் காலவேல் நிருதரை அழித்தல்வேண்டும். கூசிவாள் அரக்கர்தங்கள் குலத்துயிர் குடிக்கவஞ்சிஆசையால் உழன்றிருந்து, தாடகையின் உயிரைக் குடித்தமையால் சுவை சிறிதறிந்த கூற்றினிற்கு இன்று பெருவிருந்துசெய்யப்புக் கனள்போல் இச் சூர்ப்பணகை அந்தக் கான்முதலிய அரக்கர்தம் இறுதியின் நிமித்தம் எழுந்தாள். எழுந்து,

உயரும் விண்ணிடைமண்ணிடை விழுங்கிடந் துழைக்
மயருங் கைகுலைத் தலமரு மாருயிர் சோரும் [கு
பெயரும்பெண்பிறந்தேன்பட்டபிழையெனப்பிதற்றுங்
துயருமஞ்சிமுன் றொடர்ந்திலாதொல்குடிப்பிறந்தாள்

[துன்பம் என்பதே அஞ்சி இதற்குமுன் வந்து சேர்ந்திலாத பழைய அரக்கர்குலத்தில் பிறந்த இவள், வானத்தில் உயர்வாள், தரையில் விழுவாள், கிடந்து வருந்துவாள், சோர்ந்துபோவாள். கைகளைமோதிக்கொண்டு கலங்குவாள். உயிர் சோர்ந்து மூர்ச்சிப்பாள். எழுவாள். "பெண்ணாய்ப் பிறந்த நான்பட்ட இவ்வவமானம் என்னே" என்று பிதற்றுவாள்] மூக்கை ஒற்றிக்கொள்வாள், உலைக்களத் தீயைப்போல் பெருமூச்சுவிடுவாள், தரையில் கைகளை மோதுவாள், பெரிய தன் முலைகள் இரண்டையும் பற்றிக்கொள்ளுவாள், வியர்ப்பாள்: சுற்றிச்சுற்றி ஓடுவாள், இரத்தம் பெருகத் தளர்வாள்.

ஊற்று மிக்கநீ ரருவியி னொழுகிய குருதிச்
சேற்று வெள்ளத்துட் டிரிபவ டேவரு மிரியக்
கூற்று முட்குந்தன் குலத்தினோர் பெயரெலாங்கூறி
ஆற்று கிற்கிலள் பற்பல பன்னிநின் றழைத்தாள்.

[ஊற்றினின்று பெருகுகின்ற நீர் அருவிபோல் சொரிகின்ற சேற்றுவெள்ளத்துள் திரிபவளாகிய அவள், தேவர்களும் அஞ்சியோட, எமனும் கேட்கப்பயப்படும் தன் குலத்தினர் பெயர்களையெல்லாம் கூறி, துன்பம் பொறுக்க மாட்டாதவளாய், பற்பல சொல்லிக் கூப்பிடலாயினள்]

சூர்ப்பணகையின் புலம்பலைக் கேட்டு அவளுடன் நாமுஞ் சேர்ந்து உருகமாட்டோமாயினும், அதனிற் சோகமும் இல்லாமற் போகவில்லை:—

நிலையெடுத்து நெடுநிலத்து நீயிருக்கத் தாபதர்கள்
சிலையெடுத்துத் திரியுமிது சிறிதன்றோ தேவரெதிர்
தலையெடுத்துவிழியாமைச்சமைப்பதேதழலெடுத்தான்
மலையெடுத்த தனிமலையே யிவைகாண வாராயோ

[அனலை ஏந்திய சிவபிரானது கைலாயமலையைப் பெயர்த்தெடுத்தவொரு ஒப்பற்ற மலைபோன்ற இராவணனே, நீ இப் பெரியபூமியில் நிலைத்திருக்கவும், தவவேடங்கொண்ட இவர் வில்லை ஏந்தித்திரியும் இது உனக்கு அவமானம் அல்லவோ! தேவர்களுக்கு எதிரில் இனி நீ தலையெடுத்துப் பார்க்கமாட்டாமல் செய்கின்றதே இது! யான்பட்ட பாடுகளைப் பார்க்க நீ வரமாட்டாயோ]

புலிதானே புறத்தாகக் குட்டிகோட் படாதென்ன
வொலியாழியுலகுரைக்குமுரைபொய்யோ வூழியினுஞ்
சலியாத மூவருக்கும் வானவர்க்குந் தானவர்க்கும்
வலியானே யான்பட்ட வலிகாண வாராயோ

[ஊழிக்காலத்திலும் உலையாத திரிமூர்த்திகளுக்கும், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மேலான வலிமையுடையவனே, தாய்ப்புலி அயலிருக்கக் குட்டி பிடிபடாது, என்று ஒலிசெய்கின்ற கடலால் சூழப்பட்ட உலகிலுள்ளவர் உரைக்கும் இச்சொல் பொய்யோ! நான்பட்ட இவ்வலியைக்காண நீ வரமாட்டாயோ]

ஆர்த்தானைக் கரசுந்தி யமரர்கணத் தொடுமடர்ந்த [து
போர்த்தானையிந்திரனைப்பொருதவனைப்போர்தொலைத்
வேர்த்தானை யுயிர்கொண்டு மீண்டானை வெரின்பண்டு
பார்த்தானே யான்பட்ட பழிவந்து பாராயோ

[ஆரவாரஞ்செய்துகொண்டு, ஐராவதமென்னும் யானையரசை நடத்தித் தேவர்கள்கூட்டத்துடனே எதிர்த்த, போர்த்திறம்வாய்ந்த படைகளையுடையஇந்திரனை வலியழியச்செய்து, அதனல் வியர்க்கவியர்க்க உயிர்சுமந்து ஓடியஅவ்விந்திரனை முன்பு முதுகு கண்டவனே, நான் பட்ட நிந்தனையை வந்து நீ பார்க்கமாட்டாயோ]

காற்றினையும் புயலினையுங் கனலினையுங் கடுங்காலக்
கூற்றினையும் விண்ணினையுங் கோளினையும் பணிகொ

199138

காற்றினை நீயீண்டிருவர்மானுடலர்க்காற்றுது [ண்டற்
மாற்றினையோ வுன்வலத்தைச் சிவன்தடக்கை வாள்
[கொண்டாய்.

[சிவபிரானது பெரியகைவாளைப்பெற்றுக்கொண்டவனே, நீ வாயுதேவனையும் வருணனையும் அக்கினிபகவானையும், கொடிய காலனாகிய எமனையும் மற்றத்தேவர்களையும் கிரகங்களையும் உனக்கு ஏவலாளர்களாய் அமைத்துக்கொள்வதற்கு ஆற்றல் உடையவன் ஆயினாய். அப்படிப்பட்ட நீ, இங்கு இந்த மனிதர் இரண்டுபேருக்கு எதிர் நிற்கமாட்டாமல் உன்வலிமையை எல்லாம் மாற்றிவிட்டாயோ—மற்று என் வாராமலிருக்கின்றாய்]

உருப்படிவ மன்மதனை
யொத்துளரே யாயினுமுன்
செருப்படியிற் பொடியொவ்வா
மானிடரைச் சீறுதியோ
நெருப்படியிற் பொறிசிதற
நிறைந்தமதத் திசையானை
மருப்பொடியப் பொருப்பிடியத்
தோணிமிர்த்த வலியோனே.

[காலில் நெருப்புப்பொறி சிதறும்படி மதம்நிறைந்த திசையானைகளின் தந்தங்கள் ஒடியவும், மலைகள் இடியவும் தோள்களை நிமிர்த்திய வலிமையுடையவனே, அழகிய உருவத்தில் மன்மதனை ஒத்திருக்கின்றாராயினும், ஆற்றலில் உன் செருப்பின் அடியில் உள்ள தூசிக்கு ஒப்பாகமாட்டாத இம்மானிடரை நீ ஒரு பொருள்படுத்திக் கோபிப்பாயோ—ஆகையாற்றான் நீ வரவில்லை போலும்]

தேனுடைய நறுந்தெரியற் றேவரையுந் தெறுமாற்ற
ருனுடைய விராவணற்குந் தம்பியர்க்குந் தவிர்ந்ததோ
ஊனுடையவுடம்பினராயெங்குலத்தோர்க்குணவாய
மானுடவர் மருங்கேபுக் கொடுங்கினதோ வலியம்மா

[தேனின் மணங்கமழ்கின்ற மாலைகளையணிந்த தேவர்களையும் வெல்லவல்ல ஆற்றலுடைய இராவணனுக்கும் அவன் தம்பிமார்க்கும் அப்படிப்பட்ட வலிமையெல்லாம் இப்பொழுது ஒழிந்துவிட்டதோ! அல்லது, தசையுடைய உடம்பினர்களாய், எமது குலத்தவர்க்கு உண்ணும்உணவாக அமைந்துள்ள மனிதர்களிடத்தே அவ்வலிமையெல்லாம் சென்று சேர்ந்துவிட்டதோ? என் சொல்வேன்]

என்றென்று மூக்கும் முலையும் உகுத்த அவ்வரக்கிக் கையறநின்று கதறினள். "நாங்கள் தின்னும் இரையே நம்மை நலிந்ததென்றக்கால், என்னென் றுரைத்து யான் யாரைத்தான் துணைக்கழைப்பேன்", என்றவிவள் மூக்கிழந்தாளேனும் மாறுட மோப்பம் இழந்திலள். முலைக்கண்கள் இழந்தாளேனும், "உருப்படிவ மன்மதனை யொத்துளர்" என்று இன்னமும் இவர்களைக் காணவல்ல முகக்கண்ணை இழந்திலள். செருப்படியிற் பொடியொவ்வா மானிடரென்று இவர்தம்மை இகழும்படித் தன் மதியையே இழந்துளள்.

இராவணன் வந்திலன். அண்ணன்மார் அயர்ந்தாரென் றினி ஏனையோரை யழைக்கின்றாள்:—

மரனேயு நெடுங்கானின் மறைந்துறையுந் தாபதர்கள்
உரனேயோ வடலரக்க ரோய்வேயோ வுற்றெதிர்ந்தார்
அரனேயோ வயனேயோ வரியேயோ வெனுமாற்றற்
கரனேயோ யான்பட்ட கையறவு காணயோ.

[உன்னை எதிர்த்தவர்கள், நீ சிவனோ பிரம்மனோ விட்டுணுவோ, என வியக்கத்தகுந்த ஆற்றலையுடைய, ஏ, கரனே, மரங்கள் நிறைந்த இக்காட்டில் மறைந்து வசிக்கின்ற இந்தத் தவவேடம் பூண்டிருக்கின்றவர்களது, வலிமையின் மிகுதியோ, அல்லது வலியுடைய அரக்கர்களது சோர்வோ என்னைச் சிதைத்தது - நான் கதியற்று நிற்பதை நீ வந்து காணயோ]

என்பதன்முன் மீண்டும் அவள்நினைவு இராவணன் மாட்டே மூண்டது; ஆதலின்,

இந்திர னு மரனயனு மிமையவரும் பணிகேட்பச்
சுந்தரிபல் லாண்டிசைப்ப வுலகேழுந் தொழுதேத்தச்
சந்திரன்போ றனிக்குடைக்கீழ் நீயிருக்குஞ் சவைநடு
வந்தடியே னுணுது முகங்காட்ட வல்லேனே. [வே

[இந்திரனும் சிவனும் பிரமனும் மற்றத்தேவர்களும் குற்றேவல் செய்யவும், பார்வதி பல்லாண்டு கூறவும், ஏழுலகத்தில் உள்ளவர்களும்வந்துன்னைத் தொழுதுதுதிக்கவும், சந்திரன்போன்ற ஒப்பற்ற குடையின்கீழ் நீ கொலுவிருக்கும் சபைநடுவே அடியேன் வெட்கமில்லாமல் வந்து முகங்காட்டத் தகுவேனோ]

எனக் கூசிக்கூசிக் குழைந்த மெய்யும் மனமும் உடையவளாய் இராவணனையே அழைப்பாளாகிப் பின்னும்,

உரனெரிந்து விழவென்னை யுதைத்துருட்டி மூக்கரிந்த
நரனிருந்து தோள்பார்க்க நான்கிடந்து புலம்புவதோ
கரனிருந்த வனமன்றோ விவைபடவுங் கடவேனோ
வரனிருந்த மலையெடுத்த வண்ணாவோ வண்ணாவோ

[சிவபிரான் வீற்றிருந்த கைலைமலையைப் பெயர்த்தஅண்ணாவோ, அண்ணாவோ! மார்நெரிந்து விழும்படி என்னை உதைத்து உருட்டி மூக்கை அறுத்த ஒரு மனிதன் உயிருடன் இன்னும் இருந்து தன் தோள்களைச் செருக்குடன் பார்த்துக்கொண்டிருக்க நான் கிடந்து புலம்புவதோ; கரனுடைய காவலில் இருக்கின்ற வனமன்றோ இது. இவ்விடத்திலேயே நானிப்படி அவமானப்படும்படியும் ஆகலாமோ]

நசையாலே மூக்கிழந்து நாணமிலா நான்பட்ட
வசையாலே நினதுபுகழ் மாசுண்ட தாகாதோ [சித்து
திசையானை விசைகலங்கச் செருச்செய்து மருப்பொ
விசையாலேநிறைந்தபுயத்திராவணவோவிராவணவோ

[திசையானைகளின் வலியொழியப் போர்செய்து அவைதம் தந்தங்களை ஒடித்த கீர்த்தியாலே நிறைந்த புயங்களையுடைய இராவணனே, இராவணனே, — ஆசையினலே மூக்கை இழந்து நாணம் இல்லாத நான் பட்ட இந்தப் பழியினலே, உன்னுடைய புகழ் இழிவடைந்த தாகாதோ]

என்று எடுத்தெடுத்துச்சொல்லி ஏங்குவாளாயினள். பின், தன் பெருவலி மருகனை நினைத்தனள்.

கானமதி னிடையிருவர் காதொடுமூக் குடனரிய
மானமதாற் பாவியே னிவண்மடியக் கடவேனோ
தானவரைக் கருவறுத்துச் சதமகனைத் தளையிலிட்டு
வானவரைப் பணிகொண்ட மருகாவோ மருகாவோ

[அசுரர்களை வேரோடு அழித்து, இந்திரனக்கு விலங்கு இட்டு, தேவர்களை வேலைக்காரர்களாய்க் கொண்ட என்மருகனே, மருகனே! காட்டில் இரண்டு மனிதர் என்னுடைய காதையும் மூக்கையும் ஒருங்கே அறுக்க, அவமானத்தால் பாவியேன் இங்கே மடிந்து போகும்படி ஆயிற்றே]

ஒருகாலத் துலகேழு முருத்திரியத் தனுவொன்றாற்
றிருகாத சினந்திருகித் திசையனைத்துஞ் செலநூறி
யிருகாலிற் புரந்தரனை யிருஞ்சிறையி னிடுவித்த
மருகாவோ மானிடவர் வலிகாண வாராயோ

[முன்னொருகாலத்தில் ஏழுஉலகும் உருமாறும்படி ஒரு வில்லால் மிக்க கோபங்கொண்டு எல்லாத்திசைகளையும் முற்ற வென்று, இந்திரன் இரண்டு கால்களுக்கும் விலங்கிட்டுப் பெரிய சிறையில் வைத்த ஓ என் மருகனே, மனிதர் வலியும் இப்படிப்பட்டதென்று காண்பதற்கேனும் வரமாட்டாயோ]

என ஓலமிட்டாள். இராவணனும் வந்திலன், அவன் தம்பியரும் வந்திலர். கரதூடணதியரும் வந்திலர். அருமையொடு ஆற்றல் வாய்ந்த இந்திரஜித்தும் வந்திலன். என் செய்வாள்,

கல்லீரும் படைத்தடக்கை யடற்கரதூ டணர்முதலா
வல்லீருஞ்சுடர்மணிப்பூணரக்கர்குலத்தவதரித்தீர் [து
கொல்லீரும்படைக்கும்ப கருணனைப்போற்குவலயத்
ளெல்லீரு முறங்குகிரோ யானழைத்தல் கேளீரோ

[கல்லைப்பிளக்கவல்ல படைகளையுடைய பெரிய கைகளையுடைய வலிமைமிக்க கரனும் தூஷணனும் முதலாக, இருளைப்பிளக்கும் பிரகாசம்பொருந்திய மணிகள் இழைத்தஆபரணங்கள் அணிந்த அரக்கர்குலத்தில் அவதரித்தவர்களே! கொல்லனால் அராவப்பெற்ற கூரிய படைகளையுடைய கும்பகருணனைப்போல், இப்பூமியில் நீங்களெல்லோரும் ஒருங்கே தூங்குகின்றீர்களோ, நான் அழைப்பதை நீங்கள் கேட்கவில்லையோ]

என்று கொடிமூக்கிழந்த சூர்ப்பணகை தடிவாய் திறந்து புலம்பலுற்றாள். கும்பகருணன் ஒருவனே இப்பொழுது உறங்குகின்றனன்; மற்றவர் காலதூதர் கையிலே இனிக் கிடந்துறங்குவார். எனினும் யாரும் வந்திலர். மற்று அவ்வுறக்கத்திற்கு உந்தும்பொருட்டுக் கறங்குபோல விற்பிடித்த மரகதத்தின் மலையன்ன இராமனே வந்தெதிர் நின்றனன். அவளும்,

வந்தானை யிடைநோக்கி வயிறலைத்து மழைக்கண்ணீர்
செந்தாரைக் குருதியொடு செழுநிலத்தைச் சேறுக்கி
அந்தோவுன் றிருமேனிக் கன்பிழைத்த வன்பிழையால்
எந்தையான்பட்டபடியி துகாணென்றெதிர்வீழ்ந்தாள்

[வந்தவனைத் தன் புலம்பலுக்கூடவே பார்த்து, வயிற்றில் அடித்துக்கொண்டு, மழைபோன்று சொரிகின்ற கண்ணீரினாலும், சிவந்த தாரையாகப்பாய்கின்ற இரத்தத்தாலும் செழிப்பான அந்த நிலத்தைச் சேறுக்கி, ஐயோ, உன் அழகிய மேனிக்கு ஆசைவைத்த கொடிய குற்றத்தால், என் தலைவனே, நான்பட்ட இக்கொடுமையைப் பார், என்று அவனுக்கு எதிரில் விழுந்தாள்]

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[448-வது பக்கத் தொடர்ச்சி]

VII பிரமேயம் (Object of Knowledge)

பிரமாணத்தால் அறியப்படுவது பிரமேயம். அது ஆன்மா, சரீரம், இந்திரியம், அருத்தம், புத்தி, மனம், பிரேத்தியபாவம், பலம், துக்கம், அபவர்க்கம் என்னும் பகுதிகளையுடையது.

(i) ஆன்மா:—ஆன்மா தேகேந்திரியங்களினின்றும் வேறாய், சரீரங்களோடும் வேறாய் (பின்னமாய்) நிற்பவன். ஆன்மா விபு அல்லது வியாபகன். நித்தியன்; அவனும் மானதக்காட்சியான். விவாதத்தில், அதாவது சந்தேக முண்டாகுமிடத்து, புத்தியாதி குணலிங்க முடையவன். புத்தியாதிகள் என்பன, திக்கு காலம் முதலியன.

ஆன்மா இருவகையாம். அவையாவன பரமான்மா ஜீவான்மா. இவ்விரண்டிற்கும் பொதுவிலக்கணம் ஆன்மத்தன்மைப் பொதுவியல் புடைமை. நித்தமான ஞானத்திற்கிடனுதல்பரமான்மாவிற்கும், அநித்தமான ஞானத்திற்கிடனுதல் சீவான்மாவுக்கும் சிறப்பிலக்கணமாம்.

பரமான்மா, ஈசுவரன். அவன் அநாதி சுத்தனும், நித்தியனும், சுதந்தரனும், முற்றறிவனும், சர்வ உலக நிமித்தகாரணனும், சர்வானுக்கிரகங்களைச் செய்பவனும், பட்சபாத மில்லாதவனும், சாந்தனுமாவான்.

முற்றுணை யாயினனை மூவர்க்கு முதல்வன் றன்னைச்
சொற்றுணை யாயினனைச் சோதியை யாதரித்து
உற்றுணர்ந் துருகியூறி யுள்கசி வுடையவர்க்கு
கற்றுணை யாவர்போலு நனிபள்ளி யடிகளாரே
திருநனி பள்ளி - திருநேரிசை 1.

காரணத்தர் கருத்தர் கபாலியார்
வாரணத்துரி போர்த்த மணாளனர்
ஆரணப்பொரு ளன்பிலா லந்துறை
நாரணற்கரி யானொரு நம்பியே.
திரு அன்[illegible] திருக்குறுந்தொகை 2.

சீவான்மாவே[illegible]னும் ஜீவன். அவனும் நித்தியன், கர்த்[illegible] னாவியாபகன், சுகதுக்காதிகளும் பந்தமோ[illegible]முடையவன்.

ஆமயந்தீர்த் தடியேனை யாளாக் கொண்டார்
அதிகைவீ ரட்டானம் ஆட்சி கொண்டார்
தாமரையோன் சிரமரிந்து கையிற் கொண்டார்
தலையதனிற் பலிகொண்டார் நிறைவாம் தன்மை
வாமனனார் மாகாயத் துதிரங் கொண்டார் [ண்டார்
மானிடங்கொண் டார்வலங்கை மழுவாட்கொ
காமனையும் உடல்கொண்டார் கண்ணால் நோக்கிக்
கண்ணப்பர் பணியுங்கொள் கபாலி யாரே.
தனித் திருத்தாண்டகம் 1.

சீவான்மாவுடன் அகவிந்திரியமாய மனதின்சையோகமுண்டாயவிடத்து, நானிருக்கிறே னென்றற்றொடக்கத்து ஞானம் நிகழ்வதால் ஜீவான்மா ஞானமுள்ள காலத்துச் சேதனமாகவும், ஞானமற்றகாலத்து ஜடமாகவும் இருக்கும்.

பரமான்மா சீவான்மா வென்னு மிரண்டன்கண்ணும் பொதுவாய குணங்களுள் பரமான்மாவிடத்து ஞானம், இச்சை, முயற்சி யென்பன நித்தமாயும், சீவான்மாவிடத்து அநித்தமாயு மிருக்கும்.

முந்தி யுலகம் படைத்தான் றன்னை
மூவா முதலாய மூர்த்தி தன்னைச்
சந்த வெண்டிங்க ளணிந்தான் றன்னைத்
தவநெறிகள் சாதிக்க வல்லான் றன்னைச்
சிந்தையில் தீர்வினையைத் தேனைப் பாலைச்
செழுங்கெடில வீரட்டம் மேவினனை
எந்தை பெருமானை யீசன் றன்னை
ஏழையே னான்பண் டிகழ்ந்த வாறே.
திருவதிகை வீரட்டானம் - ஏழைத்திருத்தாண்டகம் 3.

ஜீவான்மாவிடத்துச் சிறப்புக்குணங்கள் யாவும் அநித்தமே. அவை, புத்தி, துக்கம், சுகம், இச்சை, துவேஷம், முயற்சி, தர்மம், அதர்மம், பாவனை யென்பன. ஏனெனில் இப்புத்தியாதிகள் உற்பத்தியுடையனவா யிருத்தலின் அநித்தியமாம். புத்தி முதலிய ஆறும் சுழுத்தியிலில்லை. இலாமையால் தான், உறங்கி விழித்தவனுக்கு * "நான் மிகவும் மூடனாயிருந்தேன்" என்னும் ஸ்மிருதி யுண்டாகின்றது. ஈண்டுக் கூறிய குணங்களுள் புத்தியாதி ஆறும் மனவிந்திரியத்தாலறியப்படுவன.

* யான் என்னும் புத்திக்கு விஷயமாவது ஆத்மா. அது பரமப்பீரிதிக்கு விஷயமாயிருப்பது. புத்தி முதலிய குணங்கட் கிடமாயிருப்பது எதுவோ அதுவே ஆன்மாவாகும்.

ஈச்வரன், நம்மனோரால் செய்யப்படாத காரியங்களாயிருக்கும் பதார்த்தங்களுக்குக் கர்த்தா. அவனுண்டென்பது காரியங்களுக்குக் காரணமுண்டாதலின், உபாதான † காரணத்தை விளங்கக்காணு மறிவிச்சை செயல்களையுடைய பொருள் கர்த்தாவெனப்படுவதால், அந்தக் கர்த்தா ஜீவன் ஆகாவிடில் ஈச்வரனே என்னும் முடிவு தருமன்றோ?

ஆன்மா வியாபகமுடையது என்பது நமது முன்னோர் சித்தாந்தம். ஜீவான்மாவும், பரமான்மைவைப்போலவே வியாபகமுடையது. தேகத்தின் அவித்தையால் பொருளல்லவற்றைப் பொருளென வுணரும் அஞ்ஞான காலத்திலே "தேகம் நான்" என்னும் அறிவு பெற்று மயங்கிய ஆன்மாவும் உண்மையில் வியாபகமாய்த் தேகமிருக்கும் காலத்திலும் விளங்குகின்றது. ஆகாயமானது ஏனைய பூதங்களுள்ள இடத்திலேயும் தானும் கூடவே இருப்பதுபோல், ஏககாலத்தில் ஓரே இடத்தில் பல ஆன்மாக்கள் பரமான்மாபோல் வியாபித்திருக்கின்றன. இதனால்தான் அமெரிக்காக் கண்டத்திலுள்ள ஒருவனுக்கு நமது தேசத்திலுள்ள மற்றொருவன் Telepathy என்னும் மானத இயக்கத்தால் தந்திக்கம்பியால் பேசுவதுபோல் பேசவும், இன்னும் அற்புதச்செய்கைகள் பல செய்யவும் இயலும். இத்தன்மையால் பாம்புகடித்த ஒருவனைப் பலமைல்கள் தூரத்திலுள்ள மந்திரவாதி இருந்தவிடத்திலேயே மந்திரம்செய்து எழுப்புவதை இன்றும் இந்தியாவிற் காண்கின்றோமன்றோ? பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள நோயாளியை பரிகாரம் செய்ய Vitiopathy என்னும் ஒருவகை மானத இயக்கமுண்டென்று பலர் அமெரிக்காவில் நிரூபணம் செய்திருக்கின்றனர். ஆகையால் ஆன்மா சடப்பொருள்போல் சடசம்பந்தத்தால் காணப்படினும், சிவ சம்பந்தம் பெறுங்காலத்தில் சிவனைப்போல் எல்லாத் தன்மைகளும் பெறும். இதை அப்பர் தேவாரத்திலும்காண்க:—

ஔவ தன்மை யவரவ ராக்கையான்
வெவ்வ தன்மைய னென்ப தொழிமினோ
மௌவல் நீண்மலர் மேலுறை வானொடு
பவ்வ வண்ணனு மாய்ப்பணி வார்களே
சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 13.

ஆன்மாவாவது திரவியம் ஒன்பதில் ஒன்று. இது பிருதிவி முதல் மனம்ஈறாய எட்டுத் திரவியங்களினின்றும் வேறாய்ப் புத்தியாதிகட்குக் குணி வேண்டத்தக்கதுவாம். அவ்வான்மாவும் ஞானாதி காரியம் தோன்றுதலின் விபுவாம்; விபுவென்றால் மிகப்பெரிய அளவுள்ளவனென்று பொருள்படுவதாம். பரமமகத் பரிமாணவானைப் மாறக்கூடிய தன்மை தேக சம்பந்தத்திலும் காணக்கூடுமென்பது ஆஞ்சயநேர் முயதலியோர் எடுத்துக்காட்டிய விஸ்வரூப தன்மையால் விளங்கும். விஸ்வரூபமெடுப்பது அஷ்டமா சித்திகளில் ஒன்றாயினும் அது உள்ள தன்மையை ஆன்மாவினின்று வெளியாக்குகின்றதேயன்றி, இல்லாத தத்துவத்தை எங்கிருந்தும் கொண்டுவரவில்லை.

சீவான்மாவிற்குரிய சங்கியை முதல் பாவனை யீறாயுள்ள குணங்கள் பதினான்குள் புத்தி முதலியவை விசேடண குணங்களாகும். திக்காதிகளுக்குரிய பொதுக்குணங்கள் சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், நைமித்திகத் திரவத்துவம், வேகம், திதித்தாபகம் என்பன.

† காரணத்தர் கருத்தர் கபாலியார்
வாரணத்துரி போர்த்த மணாளனர்
ஆரணப்பொரு ளன்பிலா லந்துறை
நாரணற்கரி யானொரு நம்பியே
திரு அன்பிலாலந்துறை - திருக்குறுந்தொகை 2.

அண்ட மாரிரு ளூடு கடந்தும்பர்
உண்டு போலுமோ ரொண்சுட ரச்சுடர்
கண்டிங் காரறி வாரறி வாரெலாம்
வெண்டிங் கட்கண்ணி வேதிய னென்பரே
சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 2.

திகழும் சூழ்சுடர் வானொடு வைகலும்
நிகழு மொண்பொரு ளாயின நீதியென்
புகழு மாறு மலானுன பொன்னடி
இகழு மாறிலை னெந்தை பிரானிரே
மனத்தொகைத் திருக்குறுந்தொகை 8.

ஊனுடுத்தி யொன்பது வாசல்வைத்து
வெள்ளெலும்பு தூணு வுரோம மேய்ந்து
தாமெடுத்த கூரை தவிரப் போவார்
தயக்கம்பல படைத்தார் தாமரையினார்
கானெடுத்து மாமயில்க ளாலுஞ் சோலைக்
கழிப்பாலை மேய கபாலப்பனார்
வானிடத்தை யூடறுத்து வல்லை செல்லும்
வழிவைத்தார்க் கவ்வழியே போதுநாமே.
திருக்கழிப்பாலைத் - திருத்தாண்டகம் 1.

(ii) சரீரம் சீவனுக்குப் போகநிலமான அந்தியாவயவி சரீரமாம். போகமாவது இன்ப துன்ப அநுபவம். போகம் எதனோடுகூடிய ஆன்மாவிற்றோன்றுமோ அதுவே போகநில மென்றும், சரீரமென்றும் கூறப்படும். அதைச் சேட்டாசிரய உடம்பென்னலாம். சேட்டையாவது, இதமகிழமடைதற் பரிகரித்தற்பொருட்டுப் புடைபெயர்தல் (Activity). புடைபெயர்தல் அசைவு மாத்திரமன்று ஏனைய கிரியைகளுமாம்.

உடலு முயிரு மொருவழிச் செல்லு முலகத்துள்ளே
அடையு முனைவந் தடைந்தாரமா ரடியிணைக்கீழ்"
திருக்கழுமலம் - திருவிருத்தம் 8.

சீவான்மாவிற்குத் தர்மாதர்மங்களால் உண்டாகும் சரீரம்அவற்றின் பயனுப்ச் சுகதுக்கங்களை யனுபவிப்பதற் கிடமாயிருத்தலின், அதைப் போகாயதனம் அல்லது போகநிலமென்று கூறுவர். அது வேறு திரவியத்தை யுண்டுபண்ணுவதற்கு அவயவமாகாமைபற்றி அந்தியாவயவி அல்லது ஈற்றவயவமுடையது என்று கூறப்பட்டது.

தேகமானது யோநிஜமென்றும், அயோனிஜமென்றும் இருவகை. சுக்கில சோணிதக் கலப்பினாலாகிய சரீரம் யோநிஜ மெனப்படும். அத்தகைய கலப்பின்றித் தர்ம விசேஷத்துடன் கூடிய பரமாணுவினாலாகிய சரீரம் அயோநிஜ மெனப்படும். இது தேவரிஷிகளால் பெறப்பட்டது. வருணலோகத்திலும், ஆதித்தலோகத்திலும், வாயுலோகத்திலும் பிரசித்தமென்பர் தர்க்க நூலார். இக்காலத்தில் ரசாயன சாலைகள் குழவிகளைச் சிருட்டிப்பது காண்கின்றோம். அதுவும் அயோநிஜ மென்று நாம் கூறவேண்டும். முற்கூறிய யோநிஜ இலக்கணத்தை அப்பர் திருவாக்கால் காண்க:—

கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன்றாகி
உருவாகிப் புறப்பட்டிங் கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட் டுயிராருங் கடைபோ காரால்
மருவாகி நின்னடியே மறவே னம்மான் [வண்ணம்
மறித்தொருக்காற் பிறப்புண்டேல் மறவா
திருவாரூர் மணவாளா திருத்தெங் கூராய்
செம்பொனே கம்பனே திகைத்திட்டேனே.
திருவாரூர் - திருத்தாண்டகம் 6.

பெரிய புராணம்

மூலமும், அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும்.

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவரும்

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம்!

சேக்கிழார்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ்மக்கட்கு விரித்துக் கூறவேண்டுவதில்லை. பெரியபுராண மெங்கும் பத்திச்சுவை கனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரியபுராணம். கடவுள் அன்பு, ஆன்மநேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல்நயம், பொருள்நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரியபுராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரியபுராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம். இத்தகைச் சிறந்த தமிழ்நூலை ஏழைமக்கள் எளிதில் வாங்கிப் பயன்பெற இயலாது வருந்துதல் கண்டு, அவ்வருத்தம் போக்குதற்பொருட்டுப் பெரியபுராண மூலமும், அதற்குத் திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் வரைந்துள்ள அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும், வசனமும் சேர்ந்த ஒரு பதிப்பை டிம்மி ஆறு பாரங்கொண்ட சஞ்சிகை சஞ்சிகையாக மாதந்தோறும் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக. முதல் சஞ்சிகை 1932ளு ஜூன்மீ 10வ வெளிவரும். முழுப் புத்தகம் சுமார் 20 சஞ்சிகையில் முடிவு பெறக்கூடும். புத்தகம் முடிந்தபின் விலை ரூபா 5-க்கு மேல் ஆகலாம்.

சந்தா விவரம்:—மாதச் சஞ்சிகை ஒன்று தபாற் செலவுடன் ரூபா 0-4-6. புத்தக முழுவதற்கும் முன்பணம் (இம் முன்பணம் 1932ளு ஜூன்மீ 1வக்குள் அனுப்பப்படவேண்டும்)—சென்னை ரூபா 3-8-0. வெளியூர் தபாற் செலவுடன் ரூபா 4-0-0. 6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக தரப்படும்.

— விலாஸம்:—முருகவேள் புத்தகசாலை, 12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை. —

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

ச்யாவனப்ராச

ஜீவஸுதா

பாதாமி லேகியம்

தந்வந்தரி லேகியம்

தைலங்கள் :

அமிர்தாமலக

பிருங்காமலக

ஸுகுமார

ஹிமஸாகர

"பால்ஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)

காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்த மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணா)

ஸ்ப்ளிவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணா 4) கோரோஜனை மாத்திரை, (அணா 6) பால சஞ்சீவினி (அணா 4)

ID.L.ச்யாவனப்ராசா ID.L.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மெடிகேடட்-டப்பி

(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம். வேளாளர் வீதி. புரசைபாக்கம். சென்னை. விலை ரூ. 1—4—0

தினகர வெண்பா

S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L., அவர்கள் பதிப்பித்தது.

கலாநிலயம் வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை அணா 6.

மதிப்புரை

சுப்ரமண்ய பாரதியார்
அல்லது
தமிழ் நாட்டின் தேசீய கவி
திரு. சுத்தானந்த பாரதியார் எழுதியது.
பதிப்பாசிரியர்:—திரு. ரா. நாராயணஸ்வாமி
ஆசிரியர், "பாரதி"
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.
விலை ரூ. 1-4-0

சொல்லும் பொருளும் எல்லோருக்கும் எளிதில் விளங்குகின்ற தென்னும் ஒரு உவகையால் தற்காலம் தனக்கு நிகரில்லாத் தமிழ்க்கவி என்று ஒருவாயாப் பாராட்டப்பெறும் சுப்ரமண்ய பாரதியாரது வாழ்க்கைச் சரிதத்தையும் நூலின் நயங்களையும் ஆராய்ந்து வரைந்துள சுத்தானந்த பாரதியாரின் தமிழ்நடையழகையும் நுண்ணிய அறிவையும் தன் சரித்திரமுடையவர்பால் அவர்வைத்தவொரு அன்பையும் கண்டு மிகவும் மகிழ்கின்றோம். சுப்ரமண்ய பாரதியாரது வாழ்க்கை சரிதம் மிகவும் சுவையுடையது; அவருடைய தேசபக்தி அளவிறந்தது. ஆதலின் தமிழரென்றிருப்போர் அவர்நினைவை மறந்த லருமை. அதுவுமன்றி, அவர் வாகவி என்பதற்கிணங்க அவர் பாடல்களைப்படித்து இன்புற மனங்கொண்டவர்களுக்குக் கல்விப்பயிற்சி அதிகம் வேண்டா, அவர்பால்வைத்த அன்பே போதும். சுப்ரமண்ய பாரதியார் கவித்திறமையைப் புகழ்வோரிற் பெரும்பாலோர் அவருடைய பாடல்களைப்படித்ததமில்லையென்பது தெரிந்தவிடயம். இதுவே தமிழ் மக்கள் அவர்பால் எத்தனை அன்புவைத்திருக்கின்றார்களென்பதற்குத் தக்க சான்றாகும். இதனில், கவி பாரதியார் கம்பரையும் வள்ளுவரையும் ஒக்கின்றார்.

இந்நிலையில், இவ் வரகவியின் உண்மைக் குணங்களையும் மேன்மைச் சிறப்புக்களையும் எடுத்துக்காட்டுமாறு திரு. சுத்தானந்த பாரதியார் புரிந்த உதவி சிறியதன்று. ஆங்கிலத்தில், உயரிய கவிகளின் சரித்திரத்தையும் அவர்நூலின் சிறப்புக்களையும் தெள்ளிதின் ஆராய்ந்து வரைந்திருக்கின்ற "English Men of Letters" முறைக்கிணங்க இந்நூல் வரையப்பெற்றிருக்கின்ற திறமை மிகவும் பாராட்டற்குரியது. சுப்ரமண்ய பாரதியார் பாடியவைகளில் மிகச் சிறந்தவைகளென மதிக்கப்படும், "கண்ணன் பாட்டு", "குயில் பாட்டு" "பாஞ்சாலிசபதம்" என்னுமிம் மூன்று நூல்களையும்பற்றி இவ்வாசிரியர், இடையிடையே பாடல்களையும் எடுத்துக் கூறி வரைந்திருக்கின்ற அழகு, இந்நூலின் சிறப்புக்கள் பலவற்று ளொன்று.

இவ்வரிய நூலைப் பதிப்பித்துப் பிரசுரஞ்செய்த திரு ரா. நாராயணசாமி அவர்களுக்குத் தமிழுலகத்தின் நன்றி என்றும் உரியதாகும்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5 மற்ற பர்வம் அச்சில்

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

எங்களிடம் தமிழ் நாவல்களும், புராண நூல்களும், இராமாயண பாரத காவ்ய நூல்களும், தமிழில் சட்ட புத்தகங்களும் கிடைக்கும். விபரமான கேட்லாக்கிற்கு எழுதவும்.

V. S. T. சாமி, புத்தக வியாபாரம்,

புரசைவாக்கம் ஹைரோட், வேப்பேரி, சென்னை.

வர்த்தமானம்

மார்ச்சு மாதம் இறுதியில் ஹைதராபாத் நைஸாம் அவர்கள்தன்பிள்ளையுடனும்மருமகளுடனும் லக்னௌவில் உள்ள ஒரு முகமதியப் பெண்பாடசாலையைப் பார்வையிட்டனர் என்றும், அப்பொழுது நைஸாம் அவர்கள் மாதர் முக்காடிடும் கோஷா முறையை விலக்கவேண்டியதின் அவசியத்தை எடுத்துக்கூற, அந்தப் பாடசாலை மாணவிகளில் பெரும்பாலார் முக்காட்டை அகற்றினர் என்றும் தெரிகின்றது.

* * *

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை:—இச்சன்மார்க்க சபையின் 23-வது வருடக்கூட்டம் சமீபத்தில் மேலைச்சிவபுரியில் கூடிற்று. சிதம்பரம் அண்ணாமலைக் கல்லூரியின் ஆசிரியரான சுவாமி விபுலாநந்தர் இக்கூட்டத்தில் தலைமை வகித்தார். தலைவர் தம் முன்னுரையில் தமிழ்மொழியின் வளர்ச்சி, கடவுட்கொள்கை, கடவுள் வழிபாட்டின் இன்றியமையாத்தன்மை முதலிய பெரிய விடயங்களைப்பற்றி அரியதோருரை வழங்கினர்.

குடவாசல் போர்ட் ஹைஸ்கூல் தலைமையாசிரியர் ஸ்ரீமான் T.S. வேலுப்பிள்ளையவர்கள், தெய்வத்தைப் பாடிய நூல்களே தமிழ்நாட்டிலுள்ள நூல்களில் சிறந்தனவென்றும், அந்நூல்கள் அருள் நூல்கள் என்றும், இவ்வருள் நூல் கற்போருக்குளெல்லாம் நல்கவல்லதென்றும் விளக்கமாய்ப் பேசினார்; கா. சுப்பிரமணியபிள்ளையவர்கள் பின்னர், வள்ளுவரும் உரைநூலும் என்னும் விஷயமாய் நீண்டவொரு பிரசங்கத்தைச் செய்தார். அப்பொழுது அவர் மேனாட்டார் செய்துள அரிய மனநூல் ஆராய்ச்சியின் நுட்பங்களெல்லாம் வள்ளுவர் குறளில் காணக்கிடக்கின்றனவென்றும் நுணுகிக் குறளைக் கற்போரே இதனை யறியமுடியும் என்றும் விளக்கிக்காட்டினார். இவரைத் தொடர்ந்து ஸ்ரீமான் M. V. இராமானுஜாச்சாரியார் மஹாபாரதச் சிறப்பு என்பது பற்றியும், சாத்தூர் வக்கீல் T. S கந்தசாமி முதலியார் திருவள்ளுவரும் அரசியலும் என்பது பற்றியும் முறையே பேசினர்.

இறுதியில் தலைவர் முடிவுரையுடன் ஆண்டுவிழா இனிது நிறைவெய்தியது என்று செட்டிநாட்டு நண்பர் ஒருவர் அறிவிக்கின்றார்.

* * *

இப்பொழுது உலக வைரவியாபாரம் நிலைகுலைந்திருப்பதால் கடந்த ஒருவருடமாக வைரக்கற்கள் இறக்குமதி இந்தியாவில் செய்யப்படவில்லையாம். இரண்டு கோடிரூபாய் பெறுமானமுள்ள வைரக்கற்கள் இந்தியாவில் விலையாகாமல் இருக்கின்றனவாம். இந்நிலை நீடிக்குமேல் வைரவியாபாரத்தில் பலர் அதிக நஷ்டப்பட நேரிடுமாதலின் அதைத்தவிர்க்க என்ன செய்யலாம் என்று வைரவியாபாரச் சங்கத்தார் ஆலோசனை செய்துவருகின்றனராம்.

— தேகபலம் —

:: புத்திர சந்தானம் ::

இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்ரைகளை உபயோகியுங்கள்.

சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.

மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.

இனும்! காம சாஸ்திரம் இனும்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நே:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரீபோர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும, பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினுல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்,

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

ஆங்கில ஆசான்

எமதுலேடி டிரேட் மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

60 நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிகப் பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துகளில் அச்சியற்றி யுள்ளோம். இதுவரை 53100 புத்தகங்கள்செலவாயுளது இதன் மேன்மைக் கடையாளம். இப் பத்தாம் பதிப்பு ஆங்கில வாசானைப்போல், வேறு எப்புத்தகமும் சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவாது. நம் முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர் கூட 10-வது பதிப்பை வாங்கவேண்டும். இதில் 1 அணு முதல் 3000 ரூபாய் வரைச் சம்பளம் வாடகைக் கணக்குளது. 800 பக்கங்களுக்கு மேற்கொண்ட அழகிய சீமைக் கலிக்கோ பயிண்டுடையது.

விலை ரூ 2.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)